உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(*ALL RIGHTS RESERVED.*)

தொகுதி 5 } இரௌத்திரி ௵ சித்திரை௴ ௧௳ / 1920 ௵ ஏப்ரல்௴ 13௳ { பகுதி 10

கடவுள் வணக்கம்.

இமையளவு போதையொரு கற்பகா லம்பண்ணு
  மிவ்வுலக மெவ்வு லகமோ
என்றெண்ணம் வருவிக்கு மாதர்சிற் றின்பமோ
  வென்னின்மக மேரு வாக்கிச்
சுமையெடுமி னென்றுதான் சும்மாடு மாயெமைச்
  சுமையாளு மாக்கி நாளும்
துர்ப்புத்தி பண்ணியுள நற்புத்தி யாவையுஞ்
  சூறையிட் டிந்திர ஜாலம்
அமையவொரு கூத்துஞ் சமைத்தாடு மனமாயை
  யம்மம்ம வெல்ல வெளிதோ
அருள்பெற்ற பேர்க்கெலா மொளிபெற்று நிற்குமீ
  தருளோ வலாது மருளோ
சமயநெறி காணாத சாக்ஷிநீ சூக்ஷ்மமாத்
  தமியனேற் குளவு புகலாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
  சச்சிதா நந்த சிவமே.

செய்யுந் தவஞ்சற்று மில்லாத நானுன் றிருவடிக்கே
நொய்யும் புதுமல ரிட்டுமெய் யன்பர் குழாத்துடனே
கையும் சிரமிசைக் கூப்பிநின் றாடிக் கசிந்துருகி
உய்யும் படிக்கருள் செய்வதென் றோபுலி யூரத்தனே.

நாற்றச் சடலத்தை யொன்பது வாச னடைமனையைச்
சோற்றுப் பசையினை மும்மல பாண்டத் தொடக்கறையை
யாற்றுப் பெருக்கன்ன கன்மப் பெருக்கை யடர்கிருமிச்
சேற்றைத் துணையென்ற நாய்க்குமுண் டோகதி சேர்வதுவே.

ஆனந்தபோதினி

இரௌத்திரி௵ சித்திரை௴ ௧௨

ஞானாப்பியாசி

நான் முகன் படைத்தவிந் நீணிலந்தன்னில் பல்வகைப் பிறவிகளில் பிறந்திறந்துழலும் மானிடர்களில், அத் துக்க சாகரத்தினின்றும் அழிவிலாப் பேரின்பமளிக்கும் முத்தியங்கரை சேர விரும்புவோர் ஞானத்தைப் பெற வேண்டு மென்பது யாவருமறிந்த விஷயமே.

ஞானத்தைப் பெறுதலாவது ஆன்மா தன் சுய ரூபத்தை யறியவொட்டாது, அறிவாகிய கண்ணைத் திரைபோல் மூடிக்கொண்டிருக்கும் அஞ்ஞான மென்னும் மாயையை யழித்துத் தன்னைத் தா னறிதலே யாகும். அனுபவத்தில் மனமே மாயையா யிருக்கிறது. மன அசைவே பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணம். மனம் முளைத்தலே மாயை தோன்றுவதாகும். இம்மன மொடுங்கிக் களங்கமற்ற விண் போல் (சத்துவ குணமயமான) உள்ள மாத்திரமாய் (சாக்ஷி மாத்திரமாய்) நின்று விட்டால் மாயையழிந்ததாகும். பிறகு நினைப்பு மறப்பொழிந்து உலகம் பேய்த்தேர் போல் பொய்யெனத் தோன்றும். அதன் பிறகு ஆன்மா பரமான்மாவோடு இரண்டறக்கலந்து அகண்டாகார நிலையடைந்து பிறப்பிறப் பொழிந்து பேரானந்த மயமான முத்தியின்ப மடையும்.

“ உற்றுவரு மாமாயை யுதிப்ப தெங்க
னுதித்தெழுந்து விளையாடி யொழிவ தெங்கன்
உற்றுணர வுரையென்ன முனிவன் கேட்ப
உத்தமநீ யறியாத வேறொன் றுண்டோ
பற்றுடைய மனவசைவால் மாயை தோன்றும்
பரிவான மாயையினால் சகமுண் டாகும்
மற்றுமனச் சங்கற்ப விகற்பத் தாலே
மாறாத பலவுலகும் வளரு மன்றே.

உலைவறவே மனமடங்கி விண்போ லானா
லுற்றெழுந்த மாமாயை யொழிந்து மாயுந்

தலையான மாமாயை யொழிந்தால் மோக
சங்கற்ப விகற்பமறுஞ் சகம் பொய்யாகும்
அலைவான மூடமறு மகில மென்னும்
வாசனை போம் பிறவியறு மாசிலாத
நிலையான பரந்தானே யெங்குந் தானாய்
நிறைந்திருக்கு மெனச்சனக னிகழ்த்தல் செய்தான்"
என்று,

"மாயை எங்கிருந்து உதிக்கிறது, அது எப்படி யொழியும்" என்று தன்னைக் கேட்ட சுகமுனிவர்க்குச் சீவன் முக்தராய் இராஜ்ய பரிபாலனம் செய்துகொண் டிருந்த சனகமகாராசன் கூறினார்.

(சுகர் கைவல்யம்.)

மனம் ஒடுங்க வேண்டியதே யாவற்றிற்கும் முக்கிய காரணம் என்றும் அதற்குப் பக்தி யவசியம் வேண்டிய தென்றும் பக்தியின் றேல் அருட்தன்மை சித்திக்கா தென்றும் முன்னமே பன்முறை நாம் கூறியிருப்பதை நண்பர்கள் அறிந்தே யிருப்பீர்கள். இப்போது அவற்றைப்பற்றிக் கூற நாம் முன்வரவில்லை. இவ்வாறு மனதை யடக்கி ஞானம் பெற முயல்வது எல்லாராலும் ஆகக் கூடிய காரியமல்ல. முதலாவது மனம் வேறு நாம் வேறு என்று மனதைத் தனக்கன்னியமாய்க் காணக்கூடிய அறிவு வேண்டும்.

ஞான அப்பியாசம் செய்யத் தொடங்குவோர்கள் சாதன சதுஷ்டயங்களை முன்னர் பெற வேண்டும் என்பது விதி. ஆனால் அவற்றைப் பூரணமாயடைந்த பிறகே தொடங்க வேண்டு மென்று கருதியிருக்க லாகாது என்பதைப் பற்றி நாம் வரைந்து வரும் கைவல்ய வசனத்தின் தொடக்கத்தில், சாதனங்களைப் பற்றிக் கூறிய பிரசங்கத்தில் விவரமாகக் கூறி யிருக்கிறோம். ஆகையால் இப்போதும் அவற்றைப்பற்றி நாம் கூறுவது அனாவசியம்.

ஆதலின் ஞான அப்பியாசம் செய்ய விரும்புவோர் (அதாவது சாத்திர ஆராய்ச்சி செய்து அதன்படி நடக்க-அப்பியாசிக்க - முயல்வோர்) இயற்கையாகவும், செயற்கையாகவும் (தன் முயற்சியால்) அடைந்திருக்க வேண்டிய அனுபவமான விஷயங்களைத் தெளிவாய்க் கூற வேண்டியே யிதை வரையக் கருதினோம். இதிலுள்ள விதி நிஷேதங்களில் சாதன சதுஷ்டயங்களி லடங்கியவைகளில் சில கலந்திருக்கவும் கூடும்.

ஞான அப்பியாசிகள் அடைந்திருக்கவேண்டிய குணங்கள் முதலியவை:—

1. நிதம் நித்திரைக்குச் செல்லும் போதும், காலையில் விழிக்கும் போதும் உபாசனா மூர்த்தத்தின் தியானத் தோடேயே இருக்க வேண்டும்.

2. எப்போதும் அடிக்கடி கடவுளையும், நாம் ஞானத்தைப் பெற வேண்டும் என்பதையும் நினைத்துக் கொள்ளவேண்டும்.

3. "நாம் எண்ணத்தொலையாத பிறவிகள் எடுத்திருப்போம். அவற்றில் நாம் இராஜபோக முதல் சகல போகமும் அனுபவித்தே யிருப்போம்; அனுபவியாதது என்ன இருக்கப் போகிறது?" என்ற அலட்சியம் மனதிற்றோன்றவேண்டும்.

4. பிற ஜீவனது வருத்தத்தைக் கண்டதே மனம் கசிந்து பரிதபிக்க வேண்டும்.

5. எந்தக் காரியத்தையும் சுயநலங் கருதாது செய்யவேண்டும்.

6. பொறாமை யடியோடு கூடாது.

7. கோபம், துயரம் இவைவரின் மறுகணமே நீக்கிவிடவேண்டும். அதாவது ஒருவர் நமக்கு வார்த்தையாலோ செய்கையாலோ கோபம் வரும்படிச் செய்துவிட்டதாய் வைத்துக்கொள்வோம். ஒருவர் நமக்குத் தீங்கு செய்தால் சற்றும் கோப மடையாமலிருக்க யாவராலுமே முடியாது. அப்படியிருக்கவல்ல ஒருவன் சுத்தமாய் உரோஷம் முதலிய உணர்ச்சியற்ற மட்டியாக விருக்கவேண்டும். இன்றேல் அவன் ஞானவானுகவே யிருக்கவேண்டும். மற்ற யாவர்க்கும் சாதாரணமாய்க் கோபம் வருவது சுபாவம். அதிலும் இல்லற சம்பந்தம், அதாவது உலக வழியிலிருப்போர்க்குக் கோபத்தை யுண்டாக்கும் சம்பவங்கள் தாராளமாய் நேரிடும்.

ஆனல் ஞான அப்பியாசி, "நீரில் எய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்" என்றதைப் போல் மறுகிமிடம் அக்கோபத்தை மறந்து அதை வெளியிடாமலே யடக்கி விடுவான்; அல்லது வெளியிட்டாலும் உடனே யார்மேல் கோபத்தைக் காட்டினுனே அவர்களிடமே சரசமாய் இருப்பான்.

கோபத்தை உறுதியாய் மனதில் நிலைக்கவைத்துக் கொள்வோரும், அப்படிக் கோப முண்டாக்கினோர்க்குக் கெடுதி செய்வோரும் அதமகுணமுடையோராதலின், அத்தகையோர் ஞான அப்பியாசத்திற் குரிய ராகார்.

8. தனக் கொருவர் கெடுதி செய்தால் அவர்களுக்குப் பதில் கெடுதி செய்யவேண்டு மென்று கருத லாகாது.

9. வியாகூலமான சம்பவம் நேர்ந்தாலும் சீக்கிரத்தில் அது மனதை விட்டு நீங்கச் செய்யவேண்டும். நெடுநேரம் அதிலேயே மனது அழுந்தி யிருக்க விடலாகாது. இது மிகத்தீய வழக்கமாகும்.

10. ஆகாரம் மிதமாகப் புசிப்பவனாகவும், தமோ குண பதார்த்தங்களை விரும்பாதவனாகவும், பசியை யடக்க உண்பது தவிர, மற்றபடி கண்டவைகளைக் காலவரையின்றித் தின்பதில் பிரியமில்லாதவனாகவும் இருத்தல் வேண்டும்.

11. புத்தி, தைல புத்தி, வேணு புத்தி, முதலிய சூக்கும புத்தியுடையவனாக இருத்தல் வேண்டும்.

12. உலக போகங்களில் அதிக ஆவலில்லா திருக்கவேண்டும்.

இக்குணங்க ளனைத்தும் பெரும்பாலும் இயற்கையிலேயே யமைந்திருக்க வேண்டியவை.

இவையன்றி ஞானத்தை யடைய விரும்பும் அப்பியாசிகள் கவனிக்கவேண்டிய நடக்கைகள் சில விருக்கின்றன :

1. ஈசுர சிந்தனையும் ஞான அப்பியாசமு முடையோர், அல்லது அதில் பிரியமுடையோர், இவர்களோடு மட்டுமே சிநேகமும் சகவாசமும் வைத்துக்கொள்ள வேண்டும்.

2. கூடிய வரையில் ஒருவரிடமும் நெருங்கிய நட்பு வைக்காமலும், ஒருவரிடமும் பகை கொள்ளாமலுமே இருக்கவேண்டும்.

3. தான் ஞான அப்பியாசம் செய்வதால் தன்னைப் பெருமையாய் எண்ணிக்கொள்ளாமலும், அவ்விஷயத்தைப் பற்றி பகிரங்கப் படுத்திக் கொள்ளாமலும் அடக்கமாக விருத்தல் வேண்டும்.

4. உலகப் புகழ்ச்சியையும் மரியாதையையும் ஒரு போதும் இச்சிக்கலாகாது.

5. ஞான அப்பியாசி உலக சம்பந்தமான பகற் கனவிற்கு (மனோராச்சியத்திற்கு) எள்ளளவும் இடந்தரலாகாது.

6. ஸ்திரிகளின் முகத்தைப் பார்த்துப் பேசுதல், எதிர்ப்படும் மாதர் முகத்தை உற்று நோக்குதல், இத்தகைய நடக்கை அடியோடு கூடாது. கூடியவரையில் மாதரிடம் சம்பாஷிப்பதையே விலக்கி விட வேண்டும்.

இன்னொரு முக்கிய விஷயமிருக்கிறது. அதாவது குருத்தன்மை யறிதல்.

குருத்தன்மை உடையவர்களாக யாரை மதிக்கலா மென்பதை நன்குணர்ந் திருப்பது மிக அவசியமாகும். இவ்விஷயத்தில் பெரும்பாலோர் எளிதில் மயங்கி ஏமாந்துவிடுகிறார்கள். யாரேனும் கொஞ்சம் சாத்திரங்களை வாசித்து வாசா ஞானம் பேசி படாடோபத்தோடிருப்பதைக் கண்டால், அவரையே குருவென மதித்து மயங்கிப் பின்னால் வருந்துகிறார்கள். இத்தகைய அனுபவம் இப்போதும் ஆங்காங்கு நிகழக் காண்கிறோம்.

குருவென வெளிவந்து உலகினர்க்கு ஆன்மார்த்த விஷயங்களைப் போதிக்கக்கூடியவர்கள் அடைந்திருக்கவேண்டிய குணங்கள் சில விருக்கின்றன. அவ்வாறே அவர்கள் விட்டிருக்கவேண்டிய விஷயங்களும் சில விருக்கின்றன. இல்லறம் நடாத்திக்கொண்டே சீவன் முத்தரா யிருப்போரு முண்டு. ஆனால் அத்தகையோர் தம் தர்மபத்தினியோடு பாபமற்ற தொழிலாற் பொருளீட்டித் தாமரையிலை நீர்போற் சகத்தோடும் கூடி வாழ்வர். அன்னோர் எங்கோ ஒருவர்தா முண்டு. மற்றபடி பிரம்மச்சரியாகவோ, சந்நியாசியாகவோ இருந்து கொண்டு ஞானோபதேசமோ ஆன்மார்த்த சாத்திர போதனையோ செய்ய முன்வருவோர், உலகபோகங்களில் இச்சையற் றிருந்தாலன்றி அவர்கள் போதனையை யேற்றுக் கொள்வதில் ஒரு பயனு முண்டாகாது.

மற்ற ஜனங்களைப்போலவே உண்பதும் உடுப்பதும், உலக வாழ்க்கையையும் உலகபோகங்களையும் இச்சிப்பதும் ஆகிய குணங்களை யுடையோர் மத நூலைமட்டும் மனப்பாடம் செய்துவிட்டதனாலேயே கடவுளைப்பற்றிப் போதிக்கும் மோக்ஷ வழிகாட்டிகளாய்விடுவார்களோ? எம்மதத்திலும் அத்தகையோர் அதற்கு உரியராகவே மாட்டார்கள். கண்ணில்லாதவன் ஒருவனுக்கு வழி யெப்படிக் காட்டுவான்? ஒருகாலு மில்லை.

இவ்வுலகபோகங்கள் எல்லாவற்றினும் ஒருவன் மோக்ஷமடைதற்குக் கொடிய விரோதியா யிருப்பது சிற்றின்பப் பிரியமாகிய மாதரிச்சையேயாகும். அதை யறவேயொழிக்காதவன் ஒருபோதும் கடவுளி னருளைப் பெறமாட்டான். கேவலமாகிய அதை யொழிக்காதவர்கள் அதற்கு ஏதோ தந்திரமான காரணங்களைக் கூறினால் பாமர ஜனங்கள் எளிதில் மயங்கி "அப்படி யிருந்தாலும் அவர் சாமியார்தான்" என்று நம்பி மோசம் போகிறார்கள்.

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டில் பலரால் துறவியென்றும் சுவாமியாரென்றும் மதிக்கப்பட்ட ஒருவர் இருந்தார். இப்போது நாம் இதைப்பற்றி வரைவது நமக்கு ஆன்மார்த்தக் கல்வி கற்பித்தற் குரியவராக யாரை மதிக்க வேண்டும் என்பதை யாவரும் நன்குணர்ந்து, அவ் விஷயத்தில் அதற்குப் பாத்திரமல்லாதவர்களைக் கண்டு மயங்கிப் பின்னால் வருந்தா வண்ணம் எச்சரிக்க வேண்டுமென்ற பொது நலத்தைக் கருதியே யாதலால், பெயர் இடம் முதலிய விவரங்களைப் பற்றிக் கூற வேண்டுவது அனாவசியமே யாகும். நாம் கூறும் திருட்டாந்தங்கள் பிரத்தியட்சத்தில் நடந்தவைகள் என்பது மட்டும் உண்மை யெனக் கூறுகிறோம்.

மேற்கூறிய அச்சாமியார் ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தார். அவருக்குக் கொஞ்சம் கல்வியும் கவிபாடும் சக்தியுமிருந்ததால்

சிலர் அவரிடம் நட்புக்கொள்ளவும், சுவாமியார்தான் என்று நம்பவும் இடமுண்டாகியிருந்தது. அவர் தங்கியிருந்த சத்திரத்தில் வசித்திருந்த ஒரு மூதாட்டி தன் புத்திரியாகிய வயது வந்த கன்னிகைக்குத் தேவார திருவாசக மாதிகள் கற்பிக்கும்படி சுவாமியாரை வேண்டிக்கொள்ள சுவாமியார் அவ்வாறே போதிக்கத் தொடங்கினார். ஆனால் சில நாட்களுக்குள் அக்கன்னிகையின் கற்பை யபகரித்துக் கொண்டார். அந்தோ அதற்கு அச் சாமியார் கூறிய நியாயமாவது "பரமசிவன் சுந்தரனுக்கு இரண்டு பெண்களை யளித்தான். எனக்கு ஒரு பெண்ணை யளித்தான்" என்பதே.

அடடா ! என்னபடுமோச இந்த்ரஜால நியாயமிது ! தான் செய்த கொடிய பாதகத்தோடு சுந்தரமூர்த்திகளைத் தமக் கொப்பிட்டுக்கொண்டு இன்னும் அதுவேறு பாபமூட்டை கட்டிக்கொள்ள வேண்டுமோ !

இவ்வாறே உலகத்தவர்க்கே மேலான ஆத்ம ஞானத்தைப் போதிக்க வெளிவருகிறவர்களென யாவராலும் மதிக்கப்பட்டு ஆன்மார்த்த குருவாகவே பலரால் கருத்தப்படும் ஒருவர் ஒரு யௌவன கன்னிகைக்கு நற்போதனை செய்யும்படி கோரிக் கொள்ளப்பட்டு அவ்வாறே போதித்து வந்தாராம். ஆனால் கொஞ்ச காலம் கழித்து குருவும் சீடப் பெண்ணும் மணம் புரிந்து கொள்ளத் தீர்மானித்தார்களாம். இதில் கூறப்படும் நியாயமாவது, ஒருவர்மேலொருவர் பிரியங் கொண்டு ஒருவரை யொருவர் மணம் செய்துகொள்வதாய் ஒப்பந்தம் செய்துகொண்டார்களாம். அதோடு குரு தன் சீடப் பெண்ணை மணந்துகொள்ள லாகாது என்று விதியில்லையாம்.

அந்தோ ! கடவுள் நம் தேசா சாரத்தை இந்நிலைமைக்குக் கொண்டு வந்துவிடுவா ரென்றும், நமது ஹிந்து சகோதர சகோதரிகள் தம் பெண் மக்களைப் பாது காத்து வளர்ப்பதில் இத்தகைய மூடமதிகொண் டொழுகுவார்க ளென்றும் யார் கருதினார்கள்.

குருவிற்கும் சீடனுக்கு முள்ள சம்பந்தம் தந்தைக்கும் பிதாவிற்கு முள்ள சம்பந்தம் போன்றதென்றே சொற்ப அறிவாளி கூட அறிந்திருப்பான். ஆன்றோர் நூல்களும் அவ்வாறே யறைகின்றன. இக்கலியுகத்தில் புருடன் மனைவிபோன்ற சம்பந்தமெனக்கூறும் முழு மூடரும் உண்டுபோலும். அப்படியாயின் குரு ஒரு மாதும் சீடன் வாலிபனுமாயின் அப்போதும் மணம் புரிந்து கொள்ளலாம் போலும்.

"தன்மநன் மகனே இத்தைத் தானன்றே ஞானமென்பார்" என்றும்,
"சிட்டர் புகழ் மகனே நீ சங்கித்த சங்கை நன்று தெளியக் கேளாய்"

"வாராய் என் மகனே" என்றும் குரு சிடனை விளிப்பதை நூல்களில் காணலாகும்.

இவையாவும் ஒரு பக்க மிருக்க ஈண்டு நாம் கவனிக்க வேண்டுவது ஒரு முக்கிய விஷயமே யாகும். அதாவது:—

மேற் கூறப்பட்ட இரண்டு திருட்டாந்தங்களிலும் ஆடவன் ஸ்திரீ இருவரும் மனமொத்த பின்பே புருடன் மனைவியாகத் தீர்மானித்தார்கள் என்பது வெளிப்படை. இவையாவும் ஒரு பக்கம் போகட்டும். இப்போது நாம் அறியவேண்டியது என்னெனின்,

ஒருவனைக் குருவாக மதித்து அவனிடம் தனது பெண்ணைச் சாதாரண கல்வி கற்கவோ, ஞான நூல்களையுணரவோ ஒப்புவிக்கும் ஒருவன், எந்த நம்பிக்கையோடும் கோரிக்கையோடும் பெண்ணை விடுகிறான்? நீ இவளை மனைவியாக்கிக்கொள் என்று கோரியா விடுகிறான்? இல்லை. ஞானவானாகிய இவனிடம் நமது புத்திரியைவிட்டால் அவள் நல்ல நெறிகளும், ஈசுரபக்தியும், ஆன்மார்த்த விஷயங்களும் போதிக்கப்பெற்றுக் கற்பரசியாய் இம்மை மறுமைப் பயன்களை யடைவாளென்று நம்பியே ஆவலோடு அவனிடம் விடுகிறான்.

அப்படியிருக்க இவர்களிருவரும் மணம் புரிந்துகொள்ள ஒப்பந்தம் செய்வது அல்லது புருடன் மனைவியாய் விடுவதெனின், இவர்களுக்குள் காதலைப்பற்றி சம்பாஷணை நடந்து, ஒருவர்மேல் ஒருவர்க்குக் காதல் உண்டாயிருக்கிறதென்ற விஷயம் இருவர்க்குள்ளும் பகிரங்கமாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட பின்பே இருவர்க்குள்ளும் சம்மதம் ஏற்படவேண்டும்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் முதல் முதல் காதலைப்பற்றிய பிரஸ்தாபம் யாரால் உண்டாகவேண்டும்? பெண்பாலாலென்று மூடன் கூடக் கருத நியாயமில்லை. அப்படிப் பெண்பால் "குருவே நான் தங்கள் மேல் காதல் கொண்டிருக்கிறேன்" என்று கூறும் பைத்தியம் பிடித்தவளாயிருந்தால், அப்போதும் அவளுக்குப் புத்திமதி கூறி யவளையுடனே தன்னிடமிருந்து விலக்கிவிடவேண்டியதே குருவின் கடமை. ஆகையால் ஆடவனே முதல் முதல் அதைப்பற்றிக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிரஸ்தாபித்துப் பெண்பாலை மயக்கிச் சம்மதிக்கச் செய்திருக்கவேண்டும்.

அந்தோ! ஞானத்திற்கு முழு விரோதியாகிய இந்த மாதராசையை விட்டொழிக்கச் சக்தியின்றி, நம்பிக்கைத் துரோகம் செய்வதோடு பெரும்பாதகச் செயலுக் குட்படும் இத்தகைய அவிவேகிகளையும் அயோக்கியர்களையும் ஞானவான்களென்றும் ஆன்மார்த்த போதனை செய்யத் தகுதியுடையோரென்றும் கருதலாகுமோ!

சகோதர சகோதரிகளே! மனந்தாளாமல் எச்சரிக்கைக்காகவே யிதை வரைகிறோமன்றி வேறில்லை. தயவு செய்து இனியேனும் நமது மக்களை யித்தகைய ஆபத்துக் குள்ளாக்காது ஜாக்கிரத்தை யெடுத்துக்கொள்ளுங்கள்.

நூல்களைப் படித்து விட்டு வாசா ஞானம் பேசுவதனாலேயே யொருவனை ஞானியென்றும், மற்றையருக்கு ஆன்மார்த்த போதனை செய்யத் தகுதியுடையவனென்றும் கருதி மயங்கி விடாதீர்கள். அதிலும் மங்கைப்பருவமுடைய மாதர்க்குப் போதிப்பதாயின் மற்ற குணங்களோடு உலகத்தி லீடுபட்டு வயது முதிர்ந்து விரக்தி யடைந்தவனாக இருக்கவேண்டுவது அவசியம் என்பதை மறவாதீர்கள்.

மாதர் போகத்தை வெறுக்காதவன் ஒரு போதும் அப்பதவிக்குரியவனாகான். சிலஞானிகள் தலை நடுக்கும் பாட்டியாயினும் பெண் உருவம் என்றாலே அருகில் சேர்க்கமாட்டார்கள். அதிலும் வாலிப மாதர் சகவாசத்திற் கிடமளிப்பார்களோ? அப்படிப் பலவந்தப் படுத்தப்பட்டால் அந்த விடத்தைவிட் டோடிவிடுவார்கள்.

ஆமா றறியாதோன் மூட னதிமூடன்
காமாதி நீங்காக் கலதி கலதிகட்
காமாற சத்தறி விப்போ னறிவிலோன்
கோமா னலனசத் தாகுங் குரவனே (திருமந்திரம்)

பலர்க்கும் போதிக்க வெளி வந்த ஞானி உலக விவகாரங்கள் எதிலும் தலையிடான். ஏனெனில் அவன் வைத்துக்கொண்ட விவகாரமே அவனுக்கு மிக்க அதிகம். அதோடு "உலக விவகாரங்கள் நிலையல்ல, அவை யெப்போதும் கால மாறுதலுக்குத் தக்கபடி மாறிக்கொண்டே யிருக்கும்" என்று அவன் அறிவதோடு, அத்தொழில் அவனுக்கு "பூ விற்பதை விட்டு நரகல் விற்கச் செல்வது" போல் தோன்றும். அவன் உலக விஷயங்களைக் கவனித்தல், ஒரு ஜாதியாசாரம் தேசாசாரம் முதலியவற்றைத் தழுவி நடத்தல், நாணயமாகவும் அழகாகவும் உடுத்திக் கொண்டு தேகத்தை அக்கரையோடு போற்றல், மாதரோடு சலக்கரணையாக வார்த்தை யாடுதல், அவர்கள் சகவாசத்தை யேற்றுக்கொள்ளுதல், கௌரவம் மரியாதை யிவற்றில் பிரியம் வைத்தல், ஆகிய இத்தகைய விஷயங்களை யொரு போதும் விரும்பான்.

ஆண்டவன் நம்மவர்க்கு நல்லறிவளித்து, நாம் நமது முன்னோர் பணித்த ஆகாரங்களினின்று வழுவி நரகக் குழியில் வீழாது காப்பாற்றி யருள வேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத்ஸத்.

இல்லறம்—விவாகம்

(345-ம் பக்கத் தொடர்ச்சி)

நித்தியவிதியின் தொடக்கத்திலிருந்து சரீரவியல் வரைக்கும் கூறிய விதிகளெல்லாம் பெரும்பாலும் இல்லறத்தார்களுக்கே யுரியன. சிறு பான்மை வானப்பிரஸ்தர்களுக்கும் பிரமசாரிகளுக்குமாம். கணவனை யிழந்த ஸ்திரீகளுக்கும் பொருந்தும். ஏனெனில் நால்வகை ஆசிரமங்களுக்கும் சிறப்பு விதிகளு முளவாதலால், அது சமையம் நேர்ந்தபோது விளக்கப் படும். இல்லற தருமத்திற் குரிய தம்பதிகளின் திரிகரண ஐக்கிய சம்பந்தமான விவாகத்தைச் சிறிது கூறுவாம்.

இந்த விவாக சம்பந்தம் இலௌகிகத்துக்கே யுரியதென்றும், அதனல் வேறு பயனில்லை யென்றும் சிலர் கூறுவர். அநேகமாய் அவர்கள் நாஸ்திகர்களே. ஆஸ்திகர்களுக் குள்ளும் அபிப்பிராய பேதங்களுண்டு. அவைகளை விரித் தெழுதப் புகின் நூல் விரியுமாதலால் நமது ஆரிய சித்தாந்தக் கொள்கைகளை மாத்திர மீண்டு சிறிது விரிப்பாம்.

விவாகச் சம்பந்தத்தால் தம்பதிகளின் சரீரமும் அந்தக்கரணங்களும் ஒரு தன்மைய வாகின்றன வென்றும், அதனல் அவ்விருவரும் மன மொத்துச் செய்யுந் தருமங்களெல்லாம் அவ்விருவருக்கும் பொதுவாய் நின்று, அவர்களைச் சொர்க்க முதலிய போக பூமிகளிற் சேர்க்கு மென்றும், அவர்கள் புண்ணிய பலனை அனுபவித்து ஒழித்த பின் மறுபடியும் மனித ஜாதியில் உயர்ந்த வருணத்தில் உயர்ந்த குலத்திற் பிறந்து பூர்வ கன்மவாசனையால் தரும நெறிதவருமல் ஒழுகி ஜன்மாந்தரத்தில் மீளாக் கதியாகிய பேரின்ப மோட்சத்தையும் பெற்று ஜனன மரணங்களில்லாமல் நித்தியானந்தத்தை யனுபவிப்பார்க ளென்றும் வேதம், புராணம், இதிகாசம், ஸ்மிருதிகளாதி பிரமாண நூல்களும் கூறுகின்றன. அவைகளை யோதி யுணர்ந்து மெய்ம்மையுணர்ந்த பெரியோர்களும் கூறுகின்றார்கள். அதனல் இவ்வில்லற தருமத்தை நெறிதவருமல் அனுஷ்டிக்கின்ற புண்ணிய சீலர்கள் இகபர போகங்களையும் பின் மோட்ச வாழ்வையும் பெறுவார்க ளென்றும் விளங்குகின்றது. இதனலேயே "இல்லறமல்லது நல்லற மன்று" என்று அன்னையாரும் கூறியருளினர். இல்லறம் பெரும்பான்மையும் பெண்களாலேயே பிரகாசிக்கின்றது. அப்பெண்கள் நற்குண நற் செய்கைகளும் கற்பு முடையவர்களா யிருந்தால்தான் அவ்வில்லறம் சீர்பெற்றுப் பயன் தரும். இது பற்றியே "மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை—எனைமாட்சித் தாயினு மில்" மனைவி நற்குண நற்செய்கைக ளில்லாதவளா யிருந்தால், இடம் பொருள் ஏவல்களால் எவ்வளவு சிறப்புப் பெற்றிருந்தாலும் அவ்வில் வாழ்க்கை பயன் தருவதில்லை என்று தேவர் கூறினர். அந் நற்குண நற்செய்கைகளாவன:—கற்பினல் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு, அன்னபானதிகளினல் தன் கணவனைப்போஷித்துப் போற்றி, உலகத்தில் புகழ்ச்சி பரவ வாழ்வதாம் - என்பது, "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற,—சொற்காத்துச்சோர்விலாள் பெண்" என்ற தேவர் திருக்குறளால் விளங்கப் பெறுவது காண்க. இவ்வித குணங்களை அப்பெண்ணின் மாதா பிதாக்களின் ஒழுக்கங்களினலும், மாசற்ற குல மேம்பாட்டாலும், பெண்களுக்குரிய நாணம், மடம், அச்

சம், புயிர்ப்பு என்னும் குணங்களினாலும், அண்டை அயலார் வாய்ச் சொல்லினாலும் உணர்ந்து, அப் பெண்ணை விவாகம் செய்ய வேண்டுமென் பது விதி. விவாக சம்பந்தமான கிரியைகளெல்லாம் பெண்களுக்கே சிறப்புடையன. எனென்றால் ஆடவர்களுக்கு உபநயன மென்று கூறப் பட்ட ஒரு ஸம்ஸ்காரம் தனியாகச் செய்யப்படுவதுண்டு. உபநயனம் என் பது ஞானக்கண் என்பதாம். அதுவே பரப்பிரம தரிசனம் செய்வதற் குரிய கண்ணும்: முதல் வருணத்தார்க்கு அநேகமாய் ஐந்து அல்லது எழாம் வயதி லுபநயனம் விதிக்கப் பட்டது. அது நாடிகளைச் சுத்திசெய்து பிராணவாயுவை ஸ்தம்பிப்பதினால் பிரமத்தைத் தரிசிக்கும் மார்க்கத்தை உபதேசிப்பதாம். இதுவே பிராணாயாமம் என்னப் படும். இந்தப் பிரா ணாயாமத்து நாடிகள் வசப்பட வேண்டும். நாடி முதிர்ந்த பின் வசப்படுத்து வது முடியாது. நாடிகள் வசப்படுவதற்கு மென்மைத் தன்மையோடு கூடி யிருக்கும் இளம் பருவமாகிய எழாம் வயதுக்குட்பட்ட காலமே தகுதியுடைய தாதலின் அதுவே உபநயனத்திற்குரிய காலமாம். இந்த உபநயனம் பெண்களுக்குத் தனித்துச் செய்யப்படுவதில்லை: விவாகமே அவர்களுக்கு உபநயன ஸம்ஸ்காரமாக விதிக்கப்பட்டது. ஆதலால் விவாக மென்பது பெண்களுக்கே சிறப்புடையது.

இந்த விவாகம் உத்தமம், மத்திமம், அதமம் எனமூவகைப் படும். உத் தமவிவாகமாவது கௌரி என்று கூறப்படுகிற பெதும்பைப் பருவமாகிய எட்டாம் வயதிலாவது ஒன்பதாம் வயதிலாவது செய்யப்படுவதாம். அத ற்கு மேல் மங்கைப் பருவத்துக்குள் (ருதுவாகிற காலத்துக்குள்) செய்யப் படுவது மத்திமமாம். அதற்கு மேல் பதினாறு வயதுக்குள் செயப்படும் விவாகம் அதமமாம். மங்கைப் பருவத்திலும் மடந்தைப் பருவத்திலும் செய்யப் படும் விவாகம் அந்தண ரொழிந்த எனைய மூவருணத்தாருக்கு முரியதாம். அத்தகைய பெண்களைக் கன்னியா மாடத்தில் வைத்துக் கட்டுக் காவலுடன் வளர்ப்பது வழக்கம். கன்னியா மாடத்தில் வைக்கும் சக்தி யில்லாதார் தமது வீட்டுக்குள்ளேயே அன்னிய புருடர் கண்களிற் படாமல் விவாக பரியந்தம் காப்பாற்றி வருகிறார்கள். அதற்குக் காரணம் பெண்கள் சரீரவியலில் கூறினாம். ஆண்டுக் காண்க.

அந்தணர்களுள் இடம் பொருள் எவல்களைக் கவனியாமல் குல கோத் திரங்களையும் வேதசாஸ்திர ஆராய்ச்சிகளையுமே கவனித்து அவற்றிற் சிற ந்தவனே தக்கவ னென்று நிதானிக்கப்பட்டு வந்ததனால் வரன் கிடைப் பது எளிதாம். எனெனில் புருடர்களுக்கு வேதாதி கலைகளை யோது வதைத் தவிர வேறு தொழில்க ளின்மையால், உபநயனஞ் செய்த அப் பொழுதே குரு குல வாசம் அனுப்பி விடுவார்கள். இது பிராம்மணர்களில் சர்வ சாதாரணமான வழக்க மாதலால் எல்லாரும் வேத மோதியே யிருப் பார்கள். அவ் வருணத்தாரில் வரன் கிடைப்பதும் எளிது. இக்காலத் தில் அந்தணர்கள் தங் குலதருமமாகிய வேத மோதுவதை முற்றும் மற ந்து, அந்நிய பாஷை பயின்று, உத்தியோகம் என்கிற சேவகா விருத்தி யையே சிறந்த தெனக் கைப்பற்றி வருவதால் அவர்களுள்ளும் தக்க வரன் தேடும் மஹா கஷ்டம் எற்பட் டிருப்பதோடு, பொருள் நஷ்டமு முடைய வர்களாய்த் துன்பப்பட நேர்ந்தது. உலக இன்பத்தையே மேலாகக்

கருதிச் சிற்றின்பத்தில் மூழ்கிக் கிடப்பதால் அந்தணர்களுக்குப் பெண் பிரஜைகளும் அதிகமாகவே ஜனிக்கின்றன. இது மிகவும் பரிதாபம்.

"சங்குவெண் டாம ரைக்குத் தந்தைதா யிரவி தண்ணீர்
அங்கதைக் கொய்து போட்டா லழுகச்செய் தந்நீர் கொல்லும்
துங்கவண் கரையிற் போட்டாற் சூரியன் காய்ந்து கொல்வான்
தங்களி னிலைமை கெட்டா லிப்படித் தயங்கு வாரே"

சங்கு போன்ற வெண்ணிற முள்ள தாமரைக்குச் சூரியனும் தண்ணீருமே தந்தையும் தாயுமாம். அந்தத் தாமரையைப் பிடுங்கித் தண்ணீரில் போட்டால் தாயாகிய தண்ணீர் அதனை அழுகச் செய்து கொன்று விடும். கரையிற் போட்டால் தந்தையாகிய சூரியன் அதனை உலர்த்திக் கொன்று விடும்.(ஆதலால்) தங்களுடைய நிலைமையினின்று வழுவினவர்கள் இப்படிப் பரதவிப்பார்கள், என்றபடி அந்தணர்கள் தங்கள் குல ஒழுக்கத்தைப் பற்றறவே விட்ட படியால் இக்காலத்தில் கஷ்டப் படுகிறார்கள். வர தட்சணையால் எத்தனை குடும்பங்கள் முழுகிப் போயின!! மானமுள்ள எத்தனை குடும்பங்கள் தரித்திரத்தாற் பீடிக்கப் படுகின்றன. வர தட்சணை கொடுக்கச் சக்தியில்லாத எத்தனை குடும்பங்கள் தத்தளிக் கின்றன. தக்க வரனை யடையாமல் எத்தனை பெண்கள் மனச் சந்துஷ்டியின்றிப் பரதவிக்கின்றார்கள். வரதட்சணை யதிகமாகக் கொடுக்கச் சக்தியில்லாத குலத்துப் பெண்கள் புருஷன் வீட்டில் என்னபாடு படுகிறார்கள்! வரதட்சணை கொடுத்து மணந்த பெண்களைப் புருஷனும் அவனைச் சார்ந்தவர்களும் இன்னமும் பொருள் கொண்டு வரும்படி என்ன பாடு படுத்துகிறார்கள்! இந்நிலைமை அந்தணர் ஜாதிக்கே அவகேடா யிருப்பதை உணர்வார் யார்! பரிதாபம் பரிதாபம்! இதனைச் சீர்திருத்திக் கொள்ள முடியாமல் இவர்கள் உலகத்தைச் சீர்திருத்த முயல்வது பரிதாபத்திலும் பரிதாபம். "உன் கண்ணிலுள்ள உத்தரத்தை யெடுக்காமல் பிறன் கண்ணிலுள்ள துரும்பை நீ யெப்படி யெடுப்பது?" என்ற பைபிள் வசனத்தை யாவது கடைப் பிடித்து முதலில் தம்மிடத்திலுள்ள குறைவை யொழித்துக் கொண்டால் மிக்க நலமாயிருக்கும். தற்காலத்து நிலைமையைக் குறித்து வருந்தி யெழுதியதாதலால் இது மற்றொன்று விரித்தலென்னும் குற்றத்தின் பாற்படாது. நிற்க,

உத்தம விவாகத்தைச் சிறிது கவனிப்பாம். இவ்விவாகத்தைப் பற்றித் தற் காலத்துக் கல்வி மான்கள் பல விதமாக ஆட்சேபிப்பார்கள். ஆயினும் நமது முன்னோர் கொண்ட கருத்து இன்னது என்பதைச் சற்று விஸ்தரிப்பாம். சரீர வியலிற் பெண்களுக்கு எட்டாம் வயது முதல் இரஜஸ் பரிபாகப் படத் தொடங்கிச் சரீரத்தில் வியாபிக்கும் என்று கூறுகிறோம். அதுவே பெதும்பைப் பருவமாம். அது உலகத்தை அறியாத பருவமாயிருப்பினும், கணவனுடன் கூடிவாழும் மற்றப்பெண்களைப் பார்ப்பதால் தாங்களு மிப்படித்தான் வாழ்வோ மென்றும், வாழவேண்டு மென்றும் அவர்கள் மனதிலுதிக்கும். அவ்வெண்ணம் முதிரவே ஆடவரிடத்தில் அன்பு தோன்றும். காம இச்சையை யுண்டாக்கும் இரஜஸின் வலிமையால் விஷய மின்ன தென்று தெரியாமலே ஆடவரிடத்தில் விருப்ப முண்டாகும். அது முதிர்ச்சி பெறுமாயின் காதலுண்டாம். உண்டாகவே

மனம் சலனப்படும். சலன முண்டானல் மனநிலை கெடும். அங்ஙனம் கெடா வண்ணம் அக் காலத்திலேயே விவாகம்செய்தால் அப்பெண் தனக்கும் ஒரு கணவனிருக்கிரு னென்றும், அவனிடத்தில் அன்பு செலுத்த வேண்டுமென்றும் மனதில் எண்ணம் பதியப்பெறும். தனக்கென ஏற்பட்ட பொருளை விரும்புவது இயல்பாம். அதனுல் தன் கணவனிடத்திலேயே அன்பு செல்லும். அதனுல் மன நிலைகெடாது ஒரு தன்மையதாம். மணம் புரிந்துகொண் டிருக்கும் மற்றைய பெண்களைப் போலத் தன் கணவனிடத்தில் பேசவும் விளையாடவும் கருத்துண்டாகக் காதல் அவனிடமே நிலை பெறும். அன்றேற் பலரையும் காதலிக்க நேரும். காரணம் சரீர வியலுட் கூறினும்.

ஆதலால் எட்டாம் வயது முதல் ஒன்பதாம் வயதுக்குட் செய்யப் படும் விவாகமே மன ஒற்றுமையை யுண்டாக்கி யிகபரசாதகமாக நிற்கு மென்பது நமது முன்னேர்களின் கருத்து. இதில் இன்னம் ஒரு இரகசிய முண்டு. கணவனது சரீரத்தில் பாதிச்சரீரமா யிருக்கிருள் மனைவி யென் றும், தம்பதிகளிரண்டும் ஒன்றே யாம், வேறு பட்ட இரண்டு சரீர மல்ல வென்றும் நமது சாஸ்திரங்களும் பெரியோர்களும் கூறுவதை எல்லாரு மறிந்திருப்பார்கள். அது எதனுல், என்ருல் இந்த உத்தம விவாகத்தினு லேயா மென்பது நூல்களின் கருத்து. அதனைச் சிறிது விளக்குவாம். அதன்முன், முன்பு ஸ்நானத்தைப் பற்றி யெழுது மிடத்து அப்பியங்கன ஸ்நான மென்று கூறி, "இது குறிக்கொள்ளத் தக்கது" என்று கூறினேம். நமது பத்திரிகா நண்பர்கள் அதனை யிப்பொழுது ஞாபகத்தில் வைக்கும் படி வேண்டுகிறேம். (தொடரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

நீதிவாக்கியங்கள்

க. கடவுள் ஒருவர் உளர். அவரே உலகத்துக்குக் கருத்தா. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் களும் அவராலேயே நடைபெறுகின்றன. நாம் அவருடைய அருளின்றி ஒருபோதும் சீவிக்கமாட்டோம். அவருடைய அருளை நாடாதொழிந்த மையினுலேயே நம்மை மலமாயை கன்மங்கள் பந்திக்கலாயின. அவரை வணங்கி அவருடைய அருளைப் பெறுவோமாயின் அம்மலமாயை கன்மங் கள் அகன்றுபோம். ஆதலால் அப்பரம்பொருளை எப்பொழுதும் வழி படல் வேண்டும்.

உ. எவர்க்கும் அவரவர் ஊழின்படியே மனம் வாக்குச்செயல்களும், நற்குணம் தீக்குணங்களும், வாழ்வுதாழ்வுகளும், கல்விசெல்வங்களும், இன்பதுன்பங்களும் பொருந்தும்.

ரு. ஒருவன் தன் இல்வாழ்க்கையை நடத்துதற்குப் பெரியோரை முதற்றுணையாகவும், அறத்தை இரண்டாந்துணையாகவும், தனது கல்வி மெய்ம் முயற்சிகளை மூன்ருந்துணையாகவும், மனைவி முதலாயினேரை நாலாந்துணையாகவுங் கொண்டு நடத்தல் வேண்டும்.

௪. பிறன்மனையாளை இச்சித்தலும், தன் மனையாளைக் கூடிவாழாது நெடுங்காலம் பிரிந்திருத்தலும், நம்பிக்கைத்துரோகஞ் செய்தலும் ஆகாவாம்.

௫. தன்னைப் புகழ்ந்துபேசுதலும், புறங்கூறலும், கோட்சொல்லலும், தீங்குவிளைக்கும் பொய்கூறலும், கடுஞ்சொற்கூறலும் ஆகாவாம்.

௬. எப்பொழுதும் எல்லோருக்கும் தமது மனம் வாக்குக் காயங்களால் இயன்ற நன்மை செய்ய வசதிப்பட்ட விடமெல்லாம் செய்தல் வேண்டும்.

௭. உலகத்து மாந்தரில் ஒருவரும் பதரல்லர். ஆகையால் ஒருவரையு மிகழ்தல் கூடாது.

௮. எல்லாமறிந்த அறிவாளியும் ஒன்று மறியாத மூடனுமில்லை. ஆகையால், தான் கல்விமானேயாயினும் பிறர்கூறும் உறுதிமொழிகளைத் தள்ளலாகாது.

௯. ஒருவனுக்கு வாய்மை (மெய்) யே தாய்; ஞானம் பிதா; தர்மம் சகோதரன்; தயை சினேகிதன்; சாந்தியே மனையாள்; பொறுமையே புதல்வன். இவ்வறுவருமே அவனைக்காக்கும் இனத்தவராவார்.

௧௦. பிறன்மனையாளைத் தாய்போலவும், பிறர்பொருளை மண்ணாங்கட்டிபோலவும், மன்னுயிரைத் தன்னுயிர்போலவும் எவன் நினைக்கிறானோ அவனே ஞானி.

௧௧. தான் தேடிய பொருளைத் தருமத்துக்கும், தன் யௌவனத்தை மனையாளுக்கும், தன் ஆன்மாவைக் கடவுளுக்கு மாக்குதலே விவேகிகள் செய்கையாம்.

௧௨. ஈகையுடையோன் வறியனாதலும், உலோபி செல்வனாதலும், பாவி தீர்க்காயுள் பெறுதலும், நல்லோர் அற்ப ஆயுளடைதலும், இழிந்தோன் அரசனாதலும், மேல்வருணத்தோர் சேவகஞ்செய்தலுமாகிய ஆறு குணங்களுங் கலியுக தர்மத்தா லுண்டாவன.

௧௩. தான் சம்பாதித்த பொருளை அனுபவித்தல் உத்தமம். பிதா வைத்த பொருளை அனுபவித்தல் மத்திமம். சகோதரன் பொருளை அனுபவித்தல் அதமம். மனைவிபொருளாகிய சீதனத்தை அனுபவித்தல் அதமாதமம்.

௧௪. கோபம் உத்தமனிடத்து ஒரு கணமும், மத்திமனிடத்து இரண்டு நாழிகையும், அதமனிடத்து இரவுபகலும், பாவியினிடத்து மரண பரியந்தமு மிருக்கும்.

௧௫. விலைமாதருடைய காட்சியினால் மனவிகார முண்டாகும்; அவர்கள் மெய்தீண்டலால் பொருள் அழியும்; கலவியால் பாவம் உண்டாகும். ஆதலால், அவர் எவ்விதத்திலும் தீங்கு விளைவிப்பவராவர்.

கசு. பணிப்பெண்ணைச் சேர்ந்தால் மானம் போம். வேசியைச் சேர்ந்தால் ஐசுவரியமழியும். விதவையைச் சேர்ந்தால் ஆயுள் குன்றும். பிறன்மனையாளைச் சேர்ந்தால் எல்லாமழியும்.

* இஃது யாவருக்கும் பெரும்பயன் படும் பொருட்டு "ஞானசித்தி" யிலிருந்து வரையப்பட்டது.

தமிழபிமானி.

பத்திரிகையும் படிப்போரும்.

1. பத்திரிகையாவது, மானிடவர்க்கத்திற்கு வேண்டும் அனுகூல போதனைகளையுஞ் சமாசாரங்களையும் ஆங்காங்கு விரித்தும் சுருக்கியும் காலத்திற்கு ஏற்ப எடுத்து ஓதும் சர்வகலா பொக்கிஷமாம்.

2. சூரியன் எவ்வாறு இருளை நீக்குகின்றானோ அதுபோல பத்திரிகையும் அஞ்ஞான இருளை யோட்டி பொய்ப்பொருளின் வேறாக மெய்ப் பொருளை இனிதெடுத்துக்காட்டும் ஞானசூரியனும். கல்விக்குறை யென்னும் கோடையினால் வருந்தும் மானிடப்பயிர்கள் தழைத்தோங்கும்படி ஞானுமிர்த தாரைகளை வர்ஷித்து அவற்றைப் பாதுகாப்பதால் கருணை மேகத்திற்கும், தத்துவோபதேசஞ் செய்தலின் ஆசிரியருக்கும், இனிய போதனைகளை உதவுவதால் மாதாவிற்கும், நல்வித்தைகளைக் காலத்திற் கேற்ப போதிப்பதால் பிதாவிற்கும், துஷ்டசெய்கையைக் கண்டித்து நல்வினையை யுண்டாக்குவதால் மன்னருக்கும், ஈஸ்வரனுக்கும் பத்திரிகை யொக்கும். பத்ரிகையால் வராத நன்மைகள் ஒரு தேசத்திற்கு வேறெதாலும் ஒருபோதும் வரமாட்டா.

3. அத்தகைய விசேஷமுள்ள பத்திரிகையை நடாத்துவதிலும் மேம்பட்ட புண்ணியம் வேறில்லை. பத்திரிகைகளினால் வரும் நன்மைகள் அனேகருக்கு நன்கு புலப்படவில்லை. அநேகம் வித்வான்களே யிதன் பெருமையை யறியார்களாயின் மற்றவர்களைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ. ஐரோப்பியர் அமெரிக்கர் முதலியோர் கல்வி செல்வ நாகரீக இராசாங்கங்களில் மேம்பட்டவர்களாகித்தொழில் விருத்தியுடையோராய் தேகவலி, படைவலி, அரண்வலிகளில் பெரும் பேறுபெற்று வாழ்தல் பத்ரிகையின் நன்மையினாலேயே. இக்காரணத்தினாலேயே மேலைத்தேசத்தார் பத்திரிகாசிரியர்களுக்கு முதன்மை கொடுத்துத் தம்மரசியலுக்கு மந்திரத் துணையாக்கிப் போற்றிவருகின்றார்கள். நம் நாட்டில் விவேகிகளினாற் பலபத்திரிகைகள் துவக்கப்பெற்றும் காலத்திற்குக்காலம் பலபல இடையூறுகளினால் நடைபெறாதொழிந்தன. இப்போது சிலசெவ்வனே நடைபெற்று வருகின்றன. நடைபெறாதொழிந்த பத்திரிகைகளினாலும் நடைபெறும் பத்திரிகைகளினாலும் நமது தமிழ்நாடு அடைந்த நன்மைகள் அளவிறந்தன.

4. அவ்வாறு அடைந்த நன்மைகளைக்கூறப்புகின் பன்னெடுங்காலஞ் செல்லும். ஆயினும் சுருங்கச்சொல்லின், இராச்சிய நுட்ப விவேகவிளக்க முஞ் சுவதந்திரத்திற்குரிய முக்கிய முயற்சிகளும், அறிவுவளர்ச்சியுமொற்றுமையும் உண்டான பெரும்பேறுகளாம்.

5. பத்திரிகை படிப்போர் பொருட்டாகவே பிரகடனஞ் செய்யப்படுகின்றன. பத்திரிகை பெற்றுப் படிக்கும் நமது அன்பர்கள் நித்திய நைமித்திக கர்மானுஷ்டானங்களை முடித்து மனதில் பூரணதிருப்தியுடன் உட்கார்ந்து சாவதானமாகப்படித்து, படித்தவற்றிலுள்ள அபூர்வவிஷயங்களை இனமினமாகச் சூசித்து எழுதிவரவேண்டும். வாசித்த பத்திரிகைகளை சிதையவிடாமல் இலக்கவரிசையாகவைத்து வருஷமுடிவில் கட்டடம் செய்து (Bind) வேண்டிய விஷயங்களைப் பார்க்கக்கூடிய எதுவில் வைக்க வேண்டும். சிலர் பத்திரிகைகளை வாசித்தும் மேல்புஸ்தகங்களுக்கு கவசமிடவும், மருந்து, சாமான்கள் மடிக்கவும், புடங்களைக் குயிற்றுதற்கும் உபயோகிக்கின்றனர். அனேகர் வாசிக்காமலே இவ்விதம் பிரயோகித்து விடுக்கின்றார்கள். இத்தகையோர் அறிவாளிக ளாகார்கள்.

6. அநேகம் பெரிய வித்வான்களும் ராசதந்திரிகளும் பிரயாசையுடனெழுதிய விஷயங்களடங்கிய பத்திரிகைகளை கஷ்டப்பட்டுத் தேடிய பொருள் கொடுத்து வாங்கியும் வாசிக்கக்கிட்டாதது எவ்வளவு பரிதாபம்! வேறுசிலர் கவலையீனமாகப் பத்திரிகையைச் சிதையவிட்டு அப்புறம் தேடி மனசு புண்ணாகி வாடுகின்றார்கள். இது சற்சனரின் தொழிலன்று. சுருங்கக்கூறின் பத்திரிகை வாசிப்பதனால் தேசாபிமானமும் பாஷாபிமானமும் சமயாபிமானமும் ஜாதியபிமானமும் கிட்டும் என்பதில் ஒரு விதமான மயக்கமும் இல்லை. இவைகளைவிரிக்கின் மிகப்பெருகும்.

சி. பா. சர்மா, வட்டுக்கோட்டை, சிலோன்.

இந்தியரின் மகிமையும் போதகாசிரியர்களும்.

'அமெரிக்காக் கண்டமானது வெகு நாள் வரையில் குண கோளார்த்தத்தில் (ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா) இருந்தவர்களுக்குத் தெரியாமலிருந்து அப்பால் அது 1492-ம்வூ கொலம்பஸ் என்பவரால் கண்டறியப்பட்டது என T. V. செல்லப்ப சாஸ்திரியாரவர்களின் நான்காவது வகுப்புக்கான பூகோள சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

சென்னையிலுள்ள ஆர். திருமலை அண்டு கம்பெனியாரால் வெளி வந்துள்ள 'பூகோள பீடிகை' என்னும் புத்தகத்திலும் "சுமார் 400-வருஷங்களாகத்தான் நமக்கு அமெரிக்காக் கண்டம் இருப்பது தெரியும். 400 வருஷங்களுக்கு முன் இருந்த கொலம்பஸால் கண்டு பிடிக்கப்பட்டது" என்று கூறப்பட்டிருக்கின்றது.

கே. ஏ. வீரராகவாச்சாரியாரவர்கள் எழுதியுள்ள 'சென்னை ராஜ்ய பூகோள சாஸ்திரம்' என்னும் புஸ்தகத்திலும் 'அமெரிக்கா:— இந்தக் கண்டத்தைக் கொலம்பஸ் என்பவர் 1492 ஆம் வருஷத்தில் கண்டு பிடித்தார். அதற்கு முன் இந்தக் கண்டம் இருப்பது யூரோப்பியருக்குத் தெரியாது' எனக் கூறப்பட்டிருக்கின்றது.

இதில் மேலே கூறிய முதலிருவர்களும், அமெரிக்காக் கண்டமானது கொலம்பஸ் கண்டு பிடிக்காததற்கு முன் உலகில் ஒருவருக்குமே தெரியா

தென்கிறார்கள். பிற்கூறியுள்ள ஆச்சாரியாரவர்களோ யூரோப்பியருக்குத் தெரியா தென்கிறார்கள். யூரோப்பியருக்குத் தெரியாது என்பதிலிருந்து, மற்றவர் எவர்களுக்கேனும் தெரிந்திருக்கலாம் எனப் பொருள் படுகின்றது.

கொலம்பஸுக்கு முன்னரே வெகு காலமாக நம்மவர் அக்கண்டத்தோடு வியாபாரம் முதலியவை செய்துகொண் டிருந்ததாக, ஜாம்நகர் கத்தியவாரிலுள்ள பிரபல ஆயுர்வேத வைத்திய சாஸ்திரியாரவர்களாகிய மணி சங்கர் கோவிந்தஜீ அவர்கள் தாமெழுதிய 'இந்தியாவின் மகிமை' என்னும் நூலில் ஆதாரங்காட்டிக் கூறியிருக்கிறார்கள். அது பின் வருமாறு:—

"கொலம்பஸ் பதினைந்தாவது நூற்றாண்டில் அமெரிகாவைக் கண்டு பிடிப்பதற்கு முன், இந்தியப் பொருள்கள் அவ்விடம் ஏற்றுமதியா யிருக்காதென ஒருகால் எண்ணலாம். அவ்வித சந்தேகத்தை ஒருவாறு நிவர்த்திப்பாம். நுண்ணறிவுடைய நமது புராதனக் கலைஞர்கள் வெளியிட்ட நூல்களை ஆராய்ச்சி செய்யுங்கால், அமெரிகா தேசத்தைப் பாதாள தேசம் என்று பல நூல்களில் சொல்லப்படுவது மன்றி, நம் இந்தியர் அந்தப் பாதாளம் அல்லது அமெரிக்கா நாட்டாரோடு அந்நியோந்நியமான வியாபாரத்தை நடத்தியிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. அமெரிகாவைக் கொலம்பஸ் கண்டு பிடித்த விஷயம் பரிசுத்தமுள்ள தன்றென்றும், சீனாவில் முன்னர் பாக்ஸர் கலகம் என்று ஒரு கலவரம் ஏற்பட்ட காலத்தில் மேற்றிசைக் கண்டத்தின ரெல்லாரும் வெற்றியுடன் அங்கு பிரவேசித்த போது அவ்விடத்திற் கிடைத்த சாசனங்களால் சீனர்கள் கொலம்பஸுக்கு முன்னரே அமெரிக்காக் கண்டத்தை யறிந்து வைத்திருந்தன ரென்றும், அதை அவர்களே பிரதமத்தில் கண்டுபிடித்தவர்க ளென்றும் வெளியாயிற்று. இத்தகைய சீனதேசமும் பண்டைக்காலத்தில் நமது தேசங்களுள் ஒன்றாக இருந்த தென்றால் நம்மவர் மாட்சிமை நவிலற் பாலதோ ?" என்பதே.

இவ்வுரை உண்மை யென்பதைச் சென்னை 'நியூ ரிபார்மர்' பத்திராதிபர் டி. கோபால செட்டியாரால் எழுதப்பட்டுள்ள "தமிழர்கள் சரித்திரம்" என்ற நூல் பின் வருமாறு கூறுவதிலிருந்து அறியலாம்:—

" * * * இசுபியஸ் என்பவர் எழுதிய சரித்திரத்தில் பாண்டிய ராஜா ரோம் தேசத்துச் சக்கரவர்த்தி அகஸ்டஸ் என்பவருக்கு இரண்டு இராயபாரங்கள் அனுப்பியதாகச் சொல்லுகிறார். ஸ்டிரேபோ என்பவர் சோரன் என்கிற ஒரு திராவிட அரசன் ரோமருடைய சிநேகிதத்தைக் கோரியதாகச் சொல்லுகிறார். கிறிஸ்து பிறப்பதற்குமுன் 27-வருஷ முதல் கிறிஸ்து பிறந்த பின் 491-வருஷம் வரையில் உள்ள வருஷங்கள் குறிப்பிட்ட ரோம தேசத்து நாணயங்கள் மதுரையிலும் மலையாளத்திலும் அநேக பட்டணங்களிலும் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றன. இவைகள் கிரீக், ரோம் தேசத்து கிரந்தகர்த்தர்கள் எழுதி வைத்திருக்கும் ஷை சங்கதிகள் உண்மை யென்பதை உறுதிப் படுத்துகின்றன. * * *

மேலும் அவர் வியம்வூ என்கிற ஓர் இராஜ தூதன் கி-பி-500-ல் சீன தேசத்தி லிருந்து தென் இந்தியாவிற்கு வந்ததாகவும் அவ்விடத்தி லிருந்த

திராவிடர்களுக்கும் ரோம்தேசத்தவர்களுக்கும் பெரிய வியாபாரங்கள் நடந்த தாகவும் சொல்லுகிறார். அத்தமிழர்கள் கி. பி. 500-600 வருஷங்களில் ஜாவா, கம்போதியா, ஆனும் முதலிய தேசங்களில் குடியேறியுமிருக்கிறார்கள். அக்காலங்களில் அவர்கள் கட்டிய கோயில்கள் இன்னும் அத்தேசங்களில் இருக்கின்றன. பாண்டிய நாட்டின் முக்கிய கடற்றுறைப் பட்டணமாகிய (கொற்கை) கோல்கை என்பது வர்த்தகஸ்தானமாக கிரீக், ரோமன் குறிப்புப் புத்தகங்களில் காணப்படுகிறது. இவற்றால் தமிழர்கள் சுமார் 3000-வருடங்களுக்கு முன்னிருந்து 1500-வருஷங்களுக்கு முன் வரையில் கிரேக்கர், ரோமர், சீனர், பீனிஷியர், அரபியர் முதலியவர்களோடு வியாபாரங்கள் முதலியன செய்து வந்ததாகவும் எற்படுகிறது.

*   *   *   *   *

பிற தேசப் பிரயாண விஷயம் பார்த்தால் சேர சோழ பாண்டிய ராஜாக்கள் காலங்களில் கி. மு. 1000-வருஷங்களுக்கு முன்னரே தமிழர்கள் கடல்களைத் தாண்டி வியாபாரம் செய்ததாகப் பத்திர அத்தாட்சிகள் இருக்கிறதை முன்னரே சொல்லியிருக்கிறோம்'' என்பதே.

வைத்திய சாஸ்திரியாரவர்கள் கூறுகிற, 'நமது முந்திய 52-தேசங்கள்' என்பதும், பரத கண்டமென்னும் நம் நாடு 56-தேசங்களாகப் பிரிவினை செய்யப்பட் டிருந்த தென்றும், அவற்றில் சீனமும் ஒருதேச மென்பதும், பெயராகராதியிலும் தமிழ்மொழி யகராதியிலும் சான்றோர்களால் கூறப்பட்டிருப்பதிலிருந்தும் சீனம் நம் நாடென்பதும் தெரிகிறது. எக்காரணத்தாலோ அது தற்போது தனியாய்ப் பிரிந்து இருக்கிறதெனவும் உணரவேண்டி யிருக்கிறது. ஆனால் தற்போது கூறப்படும் இந்தியாவுக்கு வடக்கிலும் சீனத்திற்குத் தெற்கிலும் பூமிக்கும் ஆகாயத்திற்கும் சுவர் வைத்தாப் போலுள்ள இமயபர்வதத்தால்,

"பழயன கழிதலும் புதியன புகுதலும்
வழுவலகால வகையி னனே."

என்னும் மூதுரைப்படி, காலஞ் செல்லச் செல்ல அதிக போக்கு வரவில்லாது போயிற்றோ எனவும் எண்ண வேண்டி யிருக்கிறது. ஆயினும் அது நம் நாடே! அவர்கள் நம்மவர்களே! சீன தேசத்தாரென்று தனிப்பெயரா லழைக்கப்படுவதும், நமது இந்தியாவிலுள்ள வங்காள வாசிகளை வங்காளிகளென்று கூறுவது போலவேயாம்.

மேலே குறிப்பிட்டுள்ள ஆச்சாரியாரவர்களின் அபிப்பிராயப்படியும், நம்மைத் (இந்தியர்) தவிர உலகில் மற்றை யோர்க்கு அமெரிகா என்பதொன்று இருக்கிறதென்பது தெரியாமலிருந்து கொலம்பஸால் கண்டு பிடிக்கப்பட்டதென்பது உண்மையாயிருக்கலாம்.

ஆகவே, அவ்வுண்மையை இன்னும் சில அறிஞர்களின் ஆராய்ச்சியின் அபிப்பிராயத்தின் மூலமாகத் தெளிவுற விளக்கித் தெரிவிக்க விரும்புகின்றேன்:—

மொழி நூல் ஆசிரியர், சைதாப்பேட்டை கண்டி வெஸ்லேயன் மிஷன் தியலாஜிகல் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ மாகறல்

கார்த்திகேய முதலியார் அவர்கள் தமது நூலில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது:—

"இலங்கையைப் பூமியின் மையமாக வைத்துக் கணன விதியையெழுதத் தொடங்கிய நமது நாட்டுக் கோள நூல் வல்லார், "இலங்கை மையத்திலும் யவகோடி கீழ்புரத்திலும், உரோமகம் மேற்புரத்திலும், அடியில் சித்தபுரியும் இக்கோளத்தி லமைந்திருக்கின்றன" என்று எடுத்து வெளியிட்டனர். இலங்கையின் நேர் கீழ்ப் பாகத்திலிருக்கும் நாடு சித்தபுரியெனின் அஃது இக்காலத்து வழங்கும் அமெரிகாஎன்றே போதரும்.

பழைய பூகோள படத்தில் குண கோளார்த்தத்தின் மையத்தில் இலங்கையும், குட கோளார்த்தத்தின் மையத்தில் சித்த புரியும் குறித்திருத்தலை நோக்கின், இலங்கையின் நேர் கீழ்ப் பாகத்தில்தான் சித்த புரி அமைந்துள்ளது என அறியலாம்.

இலங்கை, சித்த புரி இவ்விரண்டும் முறையே குணகோளார்த்தத்திலும் குடகோளார்த்தத்திலும் கஅ௦-வது பாகையிலேயே இருக்கின்றன.

உத்தர குரு, சித்தபுரீ, அமெரிகா, நாகபுரி, நாகருலகம் என்பன ஒரு பொருட்கிளவிகள்.

யவகோடி யெனினும் சாவக மெனினும் ஒக்கும். நாகபட்டினத்துச் சோழன் நாகருலகம் சென்று ஓர் நாக கன்னிகையை மணந்து ஆதொண்டைச் சக்ரவர்த்தியைப்பெற்றனன். அச்சோழன் நாகருலகம் போய் வந்தமையின் நாகப்பட்டின மெனப்பெயர் பெற்றது.

காவிரிப்பூம் பட்டினத்தில் பந்தனென்னும் ஓர் வணிகச் செல்வனும் நாகருலகம் சென்று ஓர் நாக கன்னியை மணந்து ஓர் பொற்படாமும் ஓர் கருநெல்லிக்கனியும் பெற்று நாகனென்னும் பெயர் பூண்டமையைப் பந்தனந்தாதியால் உணர்ந்து கொள்க.

அப்பொற்படாம் போர்த்துக் கொண்டார்க்கு இளமை மாருமையும், அக்கரு நெல்லிக்கனி யுண்டார்க்கு நீடூழிவாழும் ஆயுட் பெருக்கும் உண்டாம்.

"இனிய வுளவாக இன்னாத கூறல்,
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

என்னுந் திருக்குறளுரையில் "இனிய கனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக்கனிபோல அமிழ்தாவனவற்றை" என்றனர் பரிமேலழகரும். ஔவையார் பொற்படாமும் நெல்லிக்கனியில் ஓர் பாதியும் பந்தனுற் கொடுக்கப் பெற்றனர்.

இதனாலே அக்காலத்தார் மரக்கலவழியாகவும் நிலவழியாகவும் அமெரிக்கா நாட்டிற்குப் போய் வந்தமை புலனாகின்றது. போய் வந்தார் சிலரே என்க. முதல் ஆகாய கமனமாகச் சித்தர்கள் போயிருக்கலாம். கரிகாற் பெருவளவன் காலத்தே சாரமா முனிவன், நாகருலகம் சென்று செவ்வந்தி கொடு வந்தனன்; சூரவாதித்தன் அந்நாகருலகம் சென்று வெற்றிலைக் கொடி கொண்டு வந்து துளுவ நாட்டில் பரவச் செய்தனன். நாகருலகம், உத்தர குருவில் ஓர் பிரிவென்பர் சிலர். "காமம் நன்றாமாறு முண்டு.

சுவர்க்கத்தின்கட் சென்று போகம் துய்ப்பலென்றும் நன் ஞானங்கற்று வீடு பெறுவ லென்றும் தெய்வத்தை வழிபடுவ லென்றும், எழுந்த காமங் கண்டாயன்றே" என்று இறையனு ரகப்பொருளுரையில் கூறுகின்றமை யின், அவ்வுத்தர குருவிற்குப் போக நுகரல் வேண்டி அக்காலத்தார் போய் வந்தன ரென்பது துணிபாகின்றது.

உத்தர குருவிலுள்ள நாக கன்னியர் போகமகளி ராவர். ஆங்குள் ளோர் நாகராசனை வணங்கினமையின் நாகருலக மெனப்பட்டது. அமெரி காவில் மெக்சிகோ நகரத்தில் மாண்டி ஸூமா என்னும் அரசன்காலத்தில் நாகராசனுக்கு இரதோச்சவ முதலியன நடந்தன எனச் சரித்திராசிரியர் கூறுவர். அக் காலத்துத் தமிழர் ஆங்காங்கு சர்ப்பவணக்கம் செய்தனர். இக் காலத்தும் செய்கின்றனர். மற்றும் பிற்கூறுதும்.

1841-ல் வட அமெரிகாவில் சின்சினுட்டி என்னும் நகரத்தில் ஓர் சிலாசாசனம் கிடைத்தது. அதனை இப்பொழுது ஆராய்ச்சி செய்ததனுல் அங்கு முன்னே இந்துக்கள் இருந்தார்கள் என்பது புலனுகின்றது. 9-10-12 இந்து பத்திரிகை 11.வது பக்கம் பார்க்க.

மேற்கூறிய கணன விதியியலைச் சோதிடர்பா லறிந்தது பிரமவித் தியா பத்திரிகையிலும் எழுதியுள்ளது" என்பதே.

மேலே காண்பித்துள்ள திருட்டாந்தங்களில் கூறப்பட்டிருக்கும் நாக புரி, நாகருலகம் எனப்படும் நாகலோகம்—கீழே மூலகினென்று' என்று நா. கதிரைவேற் பிள்ளையவர்கள், காஞ்சி நாகலிங்க முதலியாரவர்கள் ஆகிய இருவரையும் ஆசிரியராகக்கொண்டு அமைந்துள்ள 'தமிழ்மொழி யகராதி' யில் கூறப்பட்டிருப்பது, மேலே விவரித்துள்ள சாட்சியத்திற்குச் சான்ருகு மென்பதைக் குறிப்பிடுதல் பொருந்தும்.

இது காறும் கூறிவந்த உதாரணங்களினின்றும் அமெரிகாவை முதன் முதலில் அறிந்தவர்கள் இந்தியரே என்பது வெள்ளிடை மலை யென விளங்கும்.

ஆகவே அமெரிகாவை முதன் முதலிற் கண்டு பிடித்தவர் கொலம் பஸ்தான் என்று இந்தியராகிய நமக்குப் போதிப்பது 'கொல்லத் தெரு வில் ஊசிவிற்பது போல்'தான். அவ்வுரை பொருந்தாததே. அப்படியுரைக் கும் நம்மவர்களாகிய T. V. செல்லப்ப சாஸ்திரியாரவர்கள், திருமலை அண்டு கம்பெனியார் முதலியவர்கள் நம்மவர்களின் சரித்திரப் பிரசித் தியை அறிந்து தமது நூல்களைத் திருத்தி நமது மகிமையை நாட்டுவார்க ளென நம்புகிருேம்.

இன்னும் சில திருட்டாந்தங்களாம் ஆராய்ச்சிகள் இனியும் வரும். சிற்றறிவினனுகிய எனது அபிப்பிராயங்களில் பேதம்ஏற்படினும் அவற்றை நமது ஆனந்த போதினி மூலமாகவே தெரிவிக்கவும் அகற்றுவிக்கவும் நமது நாட்டின் மகிமையை நாட்டுவிக்கவும் வேண்டுகிறேன்.

P. பரிமணப் பல்லவராயர்.

குறிப்பு:—கடல் கொள்ளுமுன் ஆதியிலிருந்த இலங்கை கிட்டத் தட்ட அமெரிகா வரை எட்டியிருந்ததென்றும், இப்போதுள்ளது அதன் வடகோடியிலிருந்த மிகச்சிறுதுளி போன்றதே யென்றும் தியலாபிகல் சங்கத்தாரால் வெளியிடப்பட்டிருந்த ஓர் நூலில் தக்க ஆதாரங்களோடு

கூறப்பட்டிருந்ததைக் கண்டுளோம். எவ்வாற்றானும் அமெரிகா சில ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே நம்மவர்க்குத் தெரியும் என்பதில் ஐயமின்றாம். நம் முன்னோர்களுக்கிருந்த அற்புத சாமார்த்தியங்களைக் கருத அவர்கள் அமெரிகாவிற்குச் சென்று வந்தார்களென்பது ஒரு அதிசயமல்ல வென்றே கருதத்தகும். பத்திரிகாசிரியர்.

கைவல்ய நவநீத வசனம்

(336-ம் பக்கத் தொடர்ச்சி)

குரு அருளிய படிக்கே பஞ்ச கோசங்களையும் தானல்லவென்று நீக்கி அதற்கு மேற் காட்சியைக் கண்ட சீடன் ஆசானை நோக்கி,

"கபடமறியாக் குருநாதரே! தாங்களருளியபடியே ஐந்துகோசங்களையும் ஒவ்வொன்றாகக்கண்டு நீக்கி, அதற்குமேல் பார்த்தபோது, ஒன்றுமில்லாச் சூனியமாகிய வெறும்பாழே மீதியாக நிற்கின்றதன்றி வேறொன்றும் தோன்றவில்லை. மைபோன்ற அந்தகாரத்தையோ நான் ஆன்மா வென்று அநுபவிப்பேன்?" என்று வினவினன்.

குரு:—"என் அன்பார்ந்த மகனே! சூனியத்தைக் காணும் நீ எப்படி அச் சூனியமாவாய்? உன்னாற் காணப்பட்ட ஒரு பொருள் நீ எப்படி யாவாய்? முன்புகூறப்பட்ட தசபுமான் திருட்டாந்தத்தில் பத்தாமவன் ஒன்பது பேரை யெண்ணி யெண்ணிப் பார்த்துப் பத்தாவது ஆளைக் காணே மென்று மருண்ட போது அவன் தன்முன் கண்ட பெருஞ் சூனியம் அவனுவானே? ஆகான். சூனியத்தைக்கண்ட அவனே பத்தாமவன். அதுபோல், பஞ்ச கோசங்களையும் கண்டு நீக்கிய பின்புள்ள சூனியமாகிய பாழைக் கண்டவனே நீ. உன்னாற் காணப்பட்டவைகளில் எதுவும் நீயாகாது. யாவற்றையும் காணும் சித்துப் பொருளாகிய ஆன்மாவே நீ.

[பஞ்ச கோசங்களையும் நீக்கியபின் உள்ள நிலையே மனம் ஒடுங்கிய பின் புள்ளதும். மனம் ஒடுங்கிய பின் மனதை யன்னியமாகக்கண்டு ஒடுக்கிய தன்னையே நோக்காது, அணுத்வமாகிய அந்நிலையினின்று எதிரிட்டு முன்னிலைச் சுட்டாய் நோக்கும்போது தோன்றுவதே இப்பாழாகும்.

இங்கு மிக்க நுண்ணிய அறிவால் சாக்ஷிமாத்திரமாக நிற்கும் தன்னை யறியவேண்டும். இந்த இடத்தில் கொஞ்சம் தன்னை மறந்து முன்னிலையை நோக்கின், சகல மேனும் கேவல மேனுந் தோன்றும். இப்பாழையே அவித்தை யென்றும் காரணதேக மென்றும் அறியவேண்டும். இதைக்கடந்தாலே எமனை வெல்லலாகும். இந்த அந்தகாரமே எமன். இது கரிய நீல நிறம்போன்ற தென்று ஆன்றோர் வெளியிட்டுளர். ஆதலால்தான் எமனுக்குக் கரிய நீலநிறம் என்று கூறப்பட் டிருக்கின்றது. இந்தவிடத்தைக் கடப்பதற்கே ஈசுவர அருள் வேண்டும். இதற்காகவே பக்திவேண்டு மென்றது. "மாயையெனுந் திரையை நீக்கி" என்பதும் இதையே.

"விரிவகங் கார மாதி விகாரமற் றதனபாவ
மிருமையா மிவற்றை யெல்லா மிங்கியா துணரு மியாதை
யொருபொரு ளுணரா தந்த வுணர்வுரு வான சாட்சிப்
பொருளினை மிகவு நுண்மைப் புந்தியா லுணர்தி மைந்தா"

என்று விவேக சூடாமணியில் கூறப்பட் டிருக்கிறது. ஆகவே "எது யாவற்றையு மறிகிறதோ, எதை வேறெந்தப் பொருளும் அறியாதோ, அதுவே சாக்ஷி மாத்திரமாயுள்ள ஆன்மா. அதுவே நான்" என்று அறியக்கிடக்கிறது.]

சித்துப்பொருளாகிய ஆன்மாவே நீ என்று கூறிய ஆசான் பின்னும் சீடனை நோக்கி, "ஞான விருப்பமுள்ள மைந்தனே! ஸ்தூலம், சூக்குமம், காரணம் என்று கூறப்பட்ட மூன்று தேகங்களும், அத்தேகங்களைப்பற்றித் தோன்றா நிற்கும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்ற அவஸ்தைகளும், பூத, பவிஷிய, வர்த்தமானம் என்ற முக்காலங்களும், ஜனனமாகிய கடலினிடத் துண்டாகும் அலைகள் போலத் தோன்றித் தோன்றி அழிந்தவைகளுக் கோர் அளவேயில்லை. மைந்தனே! கல்லால விருக்ஷத்தினடியில் எழுந்தருளி ஜனகாதியர்களுக்கு அங்கை நெல்லிபோல் ஞான நிலையைப் போதித்த பரமாசாரியராகிய தக்ஷிணா மூர்த்தியின் மேல் சத்தியமாகக் கூறுகிறேன். இவையனைத்தும் காணும்படியான சாக்ஷி நீயே யாகும்" என்றார்.

[மேற் கூறப்பட்ட சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்ற மூன்றவத்தைகளோடு துரியம், துரியா தீதம் என்ற இரண்டு அவத்தைகளும் கூடி மொத்தம் ஐந்தவத்தைகளாகும். ஆயினும் கடைசியில் கூறப்பட்ட துரியம் துரியா தீதம் என்ற இரண்டவத்தைகளும் யோக அப்பியாசத்தால் அடையத் தக்கவை யாதலின், முதன் மூன்றைப் பற்றியே இங்கு பிரஸ்தாபிக்கப் பட்டது.

இவற்றில் ஸ்பரிச அறிவு ஒன்றை மட்டுமே யுடைய மரம் செடியாதி தாவர உயிர்கட்கு வேறொன்றும் புலப்படுவ தில்லை யாதலின் அவைகட்குச் சுழுத்தி யவத்தை மட்டுமே யுண்டு. பரிசம் இரசம் இரண்டறிவுகள் மட்டுமே யுடைய நத்தை முதலிய உயிர்கட்கும், பரிசம், இரசம், கந்தம் ஆகிய மூன்றறிவுகளையு முடைய எறும்பு, செல் முதலியவைகளுக்கும், பரிசம், இரசம், கந்தம், உருவம் என்ற நான்கறிவுகளையுடைய வண்டுமுதலிய வுயிர்கட்கும், பரிசம், இரசம், கந்தம், உருவம், சத்தம் ஆகிய ஐந்தறிவுகளையுமுடைய பக்ஷிகள் மிருகங்கள் முதலியவைகட்கும் நம் போன்ற நினைவின்றி கனவு போன்ற நினைவே யுளதால் சொப்பனம் சுழுத்தி இரண்டவஸ்தைகளே யுண்டு. தேவர்கட்குத் தோன்றிய நினைவு மறத்தலின்மையின் எப்போதும் சாக்கிர மொன்றே யன்றி சொப்பனமும் சுழுத்தியுமில்லை. மானிடராகிய நமக்கோ நினைப்பு மறைப்பு இரண்டு மிருத்தலின் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தியாகிய மூன்றவத்தைகளும் உண்டு.

தேவர்க்கு நினைப்பு மட்டுமே யன்றி மறைப்பில்லை. மானிடர் தவிர ஏனையவற்றிற்கு மறைப்பு மட்டு முண்டே யொழிய நினைப்பில்லை. மானிடர்க்கு மட்டுமே நினைப்பு மறைப்பு இரண்டு முண்டு. இவை யிரண்டும் நீங்கிய விடமே முத்தி யடையு மிடமாதலாலும், ஆண்டவன் மானிடர்க்கு மட்டுமே இவை யிரண்டையு மளித்து, இரண்டையு மொழிக்கச் சந்தர்ப்பமுண்டாக்கி யிருப்பதாலும், இச் சனனமே சிறந்த தென்றும் இச்சன்மத்தில்தான் முத்தி யடைய வேண்டு மென்றும் கூறப்பட் டிருக்கிறது.

சாக்கிரத்தில் விவகாரம் செய்யும் போதும், சொப்பனத்தில் விவகாரம் செய்யும் போதும் நாம் இருக்கிறோம் என்பது யாவரும் அனுபவமாயறியத்தக்க விஷயமே. அவ்வாறே சுழுத்தியிலும் நாம் உள்ளோம். "சுழுத்தியில் நாம் இல்லையே, மற்ற விரண்டிலும் தெரிந்தது போல் நித்திரையில் ஒன்றும் தெரிய வில்லையே" எனின், ஒன்றும் தெரியவில்லையென்பதை யெப்படி யுணர்ந்தாய்? இந்த நித்திரை சுகமாக இருந்தது என்று கூறுகிறாயே, நீ யப்போதிருந்து அவற்றை யுணர்ந்தாலன்றி யப்படிக் கூற வழியில்லை. மேலும் சுழுத்தியின் கண் ஆன்மா இலை யெனின் விழித்த பின் எங்கிருந்து வரும்? இவ் வாற்றால் சுழுத்தியிலும் அறிவு சொரூபமான நீ யிருக்கிறாய். ஆனால் அச்சமயம் என் அறிய வில்லை யெனின்,

கிணற்றில் விழுந்த பாத்திரத்தை யெடுக்கச் சலத்தில் முழுகியவன் அதில் பாத்திரம் உண்டு இல்லை யென்பதைச் சலத்தினின்று மேலே கிளம்பி வந்த பிறகே தான் கூறக்கூடும். ஏனெனில் சலத்துக்குள்ளிருக்கும் வரையில் அவனுக்கு உசுவாசம் நிசுவாச மாகிய உதவியும் வாய்திறந்து சத்தத்தை யுண்டாக்கும் சக்தியு மில்லை. அவ்வாறே சுழுத்தியில் காணங்களின் உதவியில்லை யாதலால் விழித்தபின் அவற்றின் உதவி பெற்றுத்தான் சுழுத்தியனுபவத்தைக் கூறவேண்டும். ஆகையால் மூன் றவத்தைகளிலும் சாக்ஷியாகிய ஆன்மா இருக்கிறது. நித்தியப் பிரளய மாகிய இவை எத்தனையோ முறை வந்து வந்து போவதால் இவைக் கெல்லாம் சாக்ஷியாகிய ஆன்மாவே நீ என் றறியவேண்டும்.]

"அவஸ்தைகள் முதலிய யாவற்றையும் காணும் சாக்ஷியாகிய ஆன்மாவே நீ என்று அறி" என்று ஆசான் கூறியதைக் கேட்ட சீடன்,

"ஏழையேன் அஞ்ஞானத்தை யொழிக்கும் பரமா சாரியரே! நான் யாவற்றையும் அறிகிறேன் என்பதை யுணர்ந்தேன். ஆனால் எதைக் கொண்டு என்னையறிவேன்? இதை யறிவிக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

குரு:—"மைந்தனே! எல்லாவற்றையும் அறியும் நம்மை எந்த உதவிகொண்டறியலாகும் என்று நீ சிந்திக்கலாகாது. ஏனெனில் சுயப் பிரகாச முடைய அறிவாகிய உன்னை நீ காண வேறு மொரு பிரகாசம் என் வேண்டும்? வேண்டுவதில்லை. முன்பு கூறிய தசமன் திருட்டாந்தத்தில் பத்தாமவனாகத் தன்னைக் கண்ட அம்மனிதன் தன்னைக் கொண்டே தன்னைப் பத்தாமவனாகக் கண்டானே யன்றி வேறொன்றினாலா கண்டான்? வேறே பதினொன்றாவது ஆள் அவனிட மிருந்தானா? (இல்லையே யென்றபடி).

ஞான சொரூபியான உன்னைக் காண வேறொரு ஞானம் வேண்டுமென்று கூறுவது மூடத்தன மாகும். ஏனெனில் அப்படி வேண்டுமெனின் அந்தஞானத்தைக் காண வேறு இன்னமொரு ஞானம் வேண்டும். இப்படியே இது முடிவு பெறாமற் போய்க்கொண்டே யிருக்கும். நீ வேறொன்றால் அறியப் படுகிற பொருளல்ல; அறியப்படாத பொருளுமல்ல. பின்னை நீ எத்தன்மையன் எனின் வேறொரு பிரகாசத்தை யுதவியாகக்

கோராமல் யாவற்றையும் அறிய வல்ல சுயம் பிரகாச முடைய வஸ்துவே நீ. ஆதலால் உன்னை நீயே யுணர்ந்து உன் சுய சொரூபத்தை யனுபவித் தறிய வேண்டும்.

வெல்லக்கட்டியை மாவில் சேர்த்து சுட்ட பலகாரங்க ளனைத்தையும் அவ் வெல்லக் கட்டி இனிக்கச் செய்கிறது. அப்படி யாவற்றையும் இனிக் கச் செய்த அந்த வெல்லக் கட்டிக்கு இனிப்பே சுபாவ மல்லவா. ஆகை யால் அதை யினிக்கச் செய்ய வேறெதன் சேர்க்கை வேண்டுவது? வேண் டுவதே யில்லை. அது போல் அறிவாகிய ஆன்மா தன் சுயப்பிரகாசத் தால் யாவையும் அறிகிறது. தன்னையே அறிய அதற்கு வேறு பிரகாசம் வேண்டுவதில்லை. இத்தகைய ஆன்மாவாகிய நீயே **துவம்** அல்லது **அகம்** என்ற பதத்தின் இலட்சியார்த்த மாகும்.

[தத்வமசி மகாவாக்கியத்திலுள்ள மூன்று பதங்களில் தத் என்பதன் இலட்சியார்த்தம் பிரம்மம் என்றும் துவம் என்பதன் இலட்சியார்த்தம் கூடஸ்தன் அல்லது ஆன்மா என்றும் முன்னமே கூறப்பட்டிருக்கிறது. இவற்றில் துவம் பத இலட்சியார்த்தமான ஆன்மாவை யனுபவமா யறிய வேண்டுவது அவசிய மாதலின் சீடன் தன்னைத்தா னறியும் வண்ணம் நீயாகிய ஆன்மா இது வென்று ஆசான் அனுபவமாகக் காட்டினார்.

உலகிலுள்ள நாமரூப முடைய ஜடப் பொருள்களை இந்திரியங்களின் உதவிகொண் டறிவது சாமானிய அறிவுடைய யாவர்க்குமே கூடும். ஸ்தூல சரீரம் கண்முன் தோன்றுவதாயினும் அதைத் தனக்கு அன்னியமாக உணரவே கொஞ்சம் சூக்கும அறிவு வேண்டும். அதற்கு மேல் கண்ணால் காணக் கூடாத சூக்கும வஸ்துக்களாகிய கரண மாதிகளை இன்னின்னவை யென்று வேறு பிரித்துத் தனக்கு அன்னியமாய்க் காண்பதெனின் அது நல்ல சூக்கும அறிவுடையோரால் மட்டுமே ஆகத்தக்க காரியம். அத்தகைய அறிவாளி பஞ்ச கோசங்களையும் தானல்ல வென்று நீக்கி நின்ற போது, அதாவது மனதை யொடுக்கிவிட்ட போது, அவித்தை, காரண சரீரம், ஆவரணம் என்ற சூனியமாகிய பாழைத் தரிசிக்கிறான்.

அதற்கு மேல் தன்னால் காணப்படும் அப்பாழ் தானல்ல வாதலால் அதுவும் நாமல்ல வென்று தள்ளத் தக்கதே. அதைத் தள்ளியபின் தானே தன் நிஜவடிவினை யுணரவேண்டும் என்றே ஆசான் கூறியது. இங்கு ஒன்றை முன்னிலைப் படுத்தி எதிரிட்டுக்காணும் வரையில் தன்னைக் காண்பதில்லை.

"முன்னிலைச்சுட் டொழிதியெனப் பல்காலு நெஞ்சே நான்
மொழிந்தேனே நின்
றன்னிலையைக் காட்டாதே யென்னை யொன்றாச் சூட்டாதே
சரணன் போந்த
அந் நிலையே நிலை * * * * *" என்று

தாயுமானவர் கூறியுள்ளது கவனிக்கத் தக்கது. ஆன்மா அறிபடு பொரு ளல்ல வென்றது, மற்ற கடபடாதிகளைப் போல் தனக்கன்னியமாய், முன்னிலைப் பொருளாகக் காணப்படுவ தல்ல என்று விளக்கிய தாகும்.

அவ்வாறு காணப்படும் எல்லாப் பொருள்களையும் காண்பதே ஆன்மா. ஆகையால் முன்னிலைச் சுட்டாய் எது தோன்றினும் அது தானல்லவென்றுணர வேண்டும். 'ஒரு யானை தன் துதிக்கையால் தன் நாசியைத் தொடுவது' என்பதில் எப்படி தொடுவதும் தொடப் படுவதும் என்ற பேத மின்றி உணர்ச்சி மாத்திரமாயிருக்கிறதோ, அவ்வாறே ஆன்மாவையறிவதிலும் அறியப் படுவதொன்றும் அறிவதொன்றுமாக இரண்டில்லை. தன் நிஜ சொரூபத்தைச் சாக்ஷாத்கரித் தறிய வேண்டும். அதாவது தன் சொரூப மாத்திரமாய் நின்று, அதை மட்டும் மறவாமலும், முன்னிலைச் சுட்டில்லாமலும் இருக்கும் அனுபவமே தான் ஆகும். இதை யுணர மிக்க சூக்கும அறிவு வேண்டும். இந்த நீ என்பதே தொம்பதத்தின் இலட்சியார்த்தம் ஆகும்.]

(தொடரும்) சீடன்.

குரு உபதேசம் பரம இரகசியம்.

நேயர்களே! நமது ஆனந்தனுக்கு மிக்க அன்பார்ந்த நண்பர்களில் ஒருவரும், அரிய விஷயதானம் புரிந்து வரும் அறிவாளியுமாகிய ஒரு சந்தா நேயர்,

"ஒருமொழி யாலே சுருதி யாகம முயர்புரா ணமெலா மொழியும்
ஒரு மொழி யாலே சரியைநற் கிரியை யோகபா வனையெலா மொழியும்
ஒரு மொழி யாலே அண்டபூ தங்களு மொடுங்கியே தன்னிலைதோன்றும்
ஒருமொழி சும்மா விருத்தலா மதனல் ஒப்பிலாச் சிவபத மடைவர்."

(நிஷ்டானுபூதி)

என்ற இதிற் குறிக்கப்பட்ட ஒரு மொழி யென்ப தென்ன? அதையெவ்வாறு அப்பியசிப்பது என்ற இவைகளைப் பற்றிச் சஞ்சிகையில் வெளியிடும்படி கோரிக் கொள்கிறார். அது விஷயமாய் நாம் அவருக்கு நேரே பதில் எழுதினோமாயினும், இதைப்பற்றி இங்கு இரண்டொரு வார்த்தைகள் கூற வேண்டுவ தவசிய மெனக் கருதுகிறோம். ஏனெனில் இத்தகைய நுட்பமும் இரகசியமுமான விஷயங்களைப் பற்றிச் சஞ்சிகை மூலமாக வெளியிடும்படி சிலர் கேட்கிறார்கள்.

நேயர்களே! ஞான மார்க்கத்தைப் பற்றிப் போதிக்கும் விஷயங்களில் அனேக விஷயங்கள் பத்திரிகைகளின் மூலமாகவும் கடித முலமாகவும் அறிவிக்கத் தக்கவைகளாக விருந்தாலும், சில விஷயங்கள் அவ்வாறு அறிவிக்கக் கூடாதவைகளாகவு மிருக்கின்றன. அவ்வாறறிவித்தாலும் அவற்றால் பயனுண்டாகாது. அத்தகைய விஷயங்கள் நேரில் கேட்டே அறிந்து கொள்ளத் தக்கவை. ஏனெனில்,

(1) சில விஷயங்களைப் பற்றிக் கூறும்போது கேட்போர்க்கு ஆங்காங்கு ஐயங்களுண்டாகும்; சில விடங்கள் விளங்காது. கூறுவோர் உடனுக்குடன் சந்தேகங்களை நிவர்த்தி செய்து விஷயங்களை நன்கு விளக்கிக் காட்டிய பின்பே மேல் செல்ல வேண்டும்.

(2) சில விஷயங்கள் அதிகாரி இலக்ஷணம் அறிந்து அவனுக்குத் தக்க விதமாய்ப் போதிக்க வேண்டியவைகளாக விருக்கின்றன.

(3) சில விஷயங்கள் அவனவன் மனோ நிலைமையையும் அறிவின் அளவையும் அறிந்தே, அவனவனுக்குத் தகுதியானவற்றை மட்டுமே போதிக்கத் தக்கவைகளா யிருக்கின்றன. இன்றேல் சீடன் அதை யுணர மாட்டான்.

(4) மேற் கூறப்பட்ட ஒரு மொழியென்ற குரு உபதேசம், அதற்கு முன் அறிய வேண்டியவற்றை யறிந்து அதற்கு வேண்டிய சாதனங்கள் கை வந்தவனுக்கு ஆசானே நேரில் போதிக்கத் தக்கது.

ஞான விஷயங்களே சொல்வன்மையும் அனுபவமுமுடைய ஒருவன் கேட்போனுடைய மனோநிலைமையை யுணர்ந்து அவன் மனதிற்கு விளங்கும் வண்ணம் போதிக்கத் தக்கவை. கேட்போன், அச் சாதனங்கள் கைவராத சூக்கும அறிவில்லாத மந்த அதிகாரியாயின், பரமசிவனே மான் மழுதாரியாய் நேரில் வந்து உபதேசித்தாலும், அவன் உணரமாட்டான் என்று ஆன்றோரே அருளி யிருக்கின்றனர்.

"மேலாஞ் சதுட்ட சாதனங்கள் மேவி நிறைந்த பேர்க்குரைக்கின்
மேலா மதுநா மெனத்திடமாய் விளங்கு மவையில் லாதவர்க்கு
மேலாம் பரமன் மான்மழுவாய் விளங்கி யுரைத்தும் விளங்காது
மேலாஞ் சாத னங்கள்வர மேவ வேண்டுஞ் சாதுசங்கம்."

(ஸ்ரீகுமாரதேவர்)

அதிலும் அக்குரு உபதேசம் தகுதியுடையார்க்கு மட்டுமே இரகசியமாய்ப் போதிக்கத் தக்கது. சில சமயங்களில் கண் பார்வையாலும் குறிப்பாலும் கூட போதிக்கப்படுவது. சூக்கும அறிவுடையார்க்கே அது விளங்கும். அதற்கொரு திருட்டாந்தங் கூறி யிவ்விஷயத்தை முடிப் போம்.

கனகபுரி நகரில் சித்ரசேனன் என்ற செல்வம் பொருந்திய வர்த்தகன் ஒருவனிருந்தான். அவன் மிக்க அருமையான ஒரு கிளி வைத்துக்கொண்டிருந்தான். அதை யவன் நவரத்தினங்கள் இழைக்கப் பெற்ற ஒரு பொற் கூட்டில் வைத்து மிக்க அன்போடு வளர்த்து வந்தான். ஒரு பொற்கிண்ணத்தில் பாலும், ஒரு பொற்றட்டில் இனிய கனிவர்க்கங்களும் எந்நேரத்திலும் அதன் கூட்டில் வைக்கப்பட்டே யிருக்கும். அக்கிளி அவனிடம் அழகாய்ப் பேசிக்கொண் டிருக்கும்.

ஒரு நாள் அவ்வர்த்தகன் வர்த்தக விஷயமாக வெளி நாட்டிற்குப் புறப்படும் போது தன் கிளியருகிற் சென்று "என் நண்பனே! நான் வெளி நாட்டிற்குச் செல்கிறேன். அங்கிருந்து உனக்காக வாங்கி வரத் தக்கது ஏதேனு மிருந்தால், அல்லது உனக்காகச் செய்ய வேண்டியது ஏதேனு மிருந்தால் கூறு. நான் சந்தோஷத்தோடு உன் கோரிக்கையை யீடேற்றுவேன்" என்றான்.

கிளி:—வர்த்தகரே! உமது அன்பிற்கு மிக்க வந்தனம். தாங்கள் போகும் போதேனும் வர்த்தகத் தொழிலைப் பார்த்துக்கொண்டு திரும்பிவரும் போதேனும் வழியில் மரங்களில் உல்லாசமாய்ச் சஞ்சரித்துக்கொண் டிருக்கும் என் இனத்தார்களைக் கண்டால் கீழ்க்கண்டபடி நான் கூறியதாகக் கூறும். அதாவது,

"என் சுற்றத்தாரே! நீங்களெல்லாம் சுயேச்ஸையாகச் சஞ்சரித்துக்கொண்டு இஷ்டமான விடங்கட்குச் சென்று, பிரியமான கனிவர்க்கங்களையுண்டு, இனத்தாரோடு சூலாவி யானந்தமாய்க் காலங்கழித்துக் கொண்டிருக்கிறீர்கள். நானோ ஒருகூண்டில் சிறையாக்கப்பட்டு அன்னியர்பிரியப்பட்டுக் கொடுப்பதை யுண்டு இனத்தை யெல்லாம் விட்டுப் பிரிந்து தனிக் காவலில் சிக்கி யிருக்கின்றேன். இனம் இனத்தைக் காக்க வேண்டாமா. எனக்கு விடுதலை காலமே வராதா.?" என்று நான் சொன்னதாகக்கூறி அதற்கு என் சுற்றத்தார் கூறும் மறுமொழியைக் கேட்டு வந்து என்னிடம் கூறினால் பெரும் புண்ணியமாகும் என்றது.

வர்த்தகன் அவ்வாறே கேட்டறிந்து வந்து கூறுவதாய் வாக்களித்துவிட்டுப் பிரயாணப் பட்டான். அவன் அன்னிய நாடு சென்று தன் வர்த்தகத் தொழிலை முடித்துக்கொண்டு திரும்பி வரும்போது, வழியில் இளைப்பாறுவதற்காக ஒரு ஆலமரத்தடியிற் றங்கி யிருந்தான். அம்மரத்தில் ஒரு கூட்டமான கிளிகள் சந்தோஷமாக விளையாடிக்கொண்டிருந்தன. அவைகளைப் பார்த்துக்கொண்டே யிருக்கையில் வர்த்தகனுக்குத் தன் கிளி கூறிய சமாசாரம் நினைவிற்கு வந்தது. வர்த்தகன் உடனே "கிளியரசே! கிளியரசே!" என்று கூப்பிட்டான். அங்கிருந்த கிளிகளில் ஒன்று "ஏன் ஐயா! என்னையேன் கூப்பிடுகிறீர்?" என்றது. வர்த்தகன் அதன் மேல் தன் கிளி கூறிய சங்கதிகளை யியம்பி "இதற்கு விடை யறிந்து வரச் சொல்லிற்று" என்றான்.

அக்கிளி, விடையா? என்றதும், தன் இறக்கைகளைப் பட பட வென்று அடித்துக் கொண்டு கால்களை யுதறிக்கொண்டு கீழே விழுந்து இறந்தது. இக் காட்சியைக் கண்ட வர்த்தகன் "அடடா ஈதென்ன கோரம்! நாம் ஏதோ நமது கிளியின்மே லிருந்த பட்சத்தால் அது சொல்லச் சொன்ன சங்கதியை வந்து சொல்ல, அதைக் கேட்ட இக்கிளி இப்படி யிறந்து போயிற்றே. கடைசியில் நமக்குப் பெரும் பாதகமல்லவோ சம்-வித்தது. சரி சரி, இதற்கு விடை தெரியாமற் போனாற் போகிறது" என்று சிந்தித்துக் கொண்டு உடனே அங்கிருந்து புறப்பட்டு தூரத்திலிருந்த வேறொரு விருட்சத்தின் நிழலில் தங்கி இளைப்பாறிக் கடைசியில் வீடுவந்து சேர்ந்தான். வர்த்தகன் தூரத்திற் சென்றபின் அவன் இறந்ததாக வெண்ணிய அக்கிளி உடனே பறந்து போய் மரத்திலிருந்த தன் இனத்தோடு சேர்ந்து கொண்டது.

வர்த்தகன் வீடுவந்து சேர்ந்து தன் கிளியருகில் சென்ற போது கிளி என் கோரிக்கையை நிறைவேற்றிக் கொண்டு வந்தீரா என்று வினவியது. வர்த்தகன் "அய்யோ! அதனால் நான் பாபத்தைச் சம்பாதித்துக் கொண்டேன். ஏனெனில் ஒரு கிளி யரசனைக் கண்டு நீ கூறிய சங்கதிகளைக் கூறி இதற்கென்ன பதில் கூறுகிறாய் என்று கேட்டேன். அய்யோ! உடனே அக்கிளி "பதிலா" என்றதும் படபட வென்று இறக்கைகளையடித்துக் கொண்டு கீழே விழுந்து கால்களை யுதறிக்கொண்டு மடிந்து போயிற்று" என்றான்.

இச்சங்கதியைக் கேட்ட அக்கணமே அக்கிளி "ஆகா" வென்றதும் கூண்டில் விழுந்து இறக்கைகளைப் பட பட வென் றடித்துக்கொண்டு கால்களை யுதறிக் கொண்டு மடிந்து போயிற்று.

இக்காட்சியைக்கண்ட வர்த்தகன் சொல்லொணுத் துயரமடைந்து "அய்யோ கடவுளே! நமக்கேன் இத்தகைய பாதகங்கள் வலிய வந்து சேர வேண்டும்? அக்கிளி கூறிய சங்கதியை இதனிடம் கூருமலிந்திருக்கலா காதா! அப்போது நமது அருமைக்கிளி மடிந்திராதே'' என்று மனோ வேதனை யடைந்து, கூண்டைத்திறந்து இரண்டு விரல்களின் நுனிகளால் அதிலிருந்த கிளியின் சவத்தைப்பற்றி யெடுத்து அருகிலிருந்த ஒரு பலகைமேல் வைத்து விட்டு, உள்ளே சென்று மனைவியிடம் சங்கதி கூறி யவளை யழைத்துக்கொண்டு செத்தகிளி இருந்த விடத்திற்கு வந்து பார்த்த போது, அதைக்காணுது வியப்புற்று நின்றுன். அச்சமயம் வீட்டின்மே லிருந்து "வர்த்தகரே வர்த்தகரே'' என்று யாரோ கூப்பிடும் சத்தத்தைக் கேட்டு இருவரும் முற்றத்தில் சென்று பார்த்தபோது தம் கிளி வீட்டின் கூரைமேல் உட்கார்ந்துகொண் டிருப்பதைக்கண்டு மிக்க ஆச்சரிய மடைந்து பிரமித்து நின்றுர்கள். அதற்குள் கிளி அவர்களை நோக்கி,

"வர்த்தகரே! நான் கூறுவதைக் கவனமாய்க் கேளும். தாங்கள் என்னை இத்தனைகாலமாகப் பட்சத்தோடு காப்பற்றியதற்கு வந்தன மளிக்கிறேன். ஆனுல் தாங்கள் தங்கள் வரையில் சந்தோஷமடைவதாகிய நலத்தைமட்டும் கருதினீரே யன்றி நான் என் இனத்தை யெல்லாம் விட்டுப்பிரிந்து சுயாதீனத்தையிழந்து சிறைப்பட்டு வருந்துவதை நீர் நினைத்துப்பார்க்க வில்லை. பிறகு நான் எப்படி இதிலிருந்து தப்பலா மென்பதையறிய என் இனத்தாருக்கு உமது மூலமாகச் சங்கதியனுப்பினேன். நீர் கண்டது எங்களுக்குள் குருவாயிருக்கும் கிளி. அது நான் தப்பித்துக்கொள்ளும் உபாயத்தைக் கூறுமற்கூறிற்று. அதாவது சமிக்கையாகக் காட்டிவிட்டது. அது இறந்துபோகவில்லை. "இறந்ததுபோல் நடந்து கொண்டால் நீ விலங்கினின்றும் தப்பித்துக்கொள்ளலாம்'' என்று எனக்குத்தெரிவித்தது. நான் இதோ உன் கண் முன்பாகவே அவ்வாறே தப்பித்துக்கொண்டேன். ஓ வர்த்தகரே! நீரும் செத்தாரைப் போல் செயலற்றுச் சிந்தையற்று உலகில் உலவிக்கொண் டிருந்தால் பிறப் பிறப்பாகிய துக்கசாகரத்தில் உம்மை யழுந்த வைத்திருக்கும் மாயையென்னும் விலங்கினின்று விடுபட்டுச் சுகமடைவீர்'' என்று கூறிப் பறந்து போய் விட்டது.

நேயர்களே! குரு உபதேசம் இவ்வாறு சூக்கும அறிவாலுணரத் தக்க இரகசியமான விஷயமாதலால், இதைப் பற்றியும், மேலே கூறியவை போன்ற விஷயங்களைப் பற்றியும் நாம் சஞ்சிகையில் வரையாததற்காக நம்மை மன்னிக்கப் பிரார்த்திக்கிறோம். ஓம் தத்சத்.

பத்திரிகாசிரியர்.

நோய்வந்தபின் காத்தலினும் அது வருமுன் காத்தலே சிறப்பு.

"நோய்க்கிடங் கொடேல்'' என்று என் அம்மை ஔவைப்பிராட்டியார் அருளின பாசுரத்திற்கு நோய் வந்த பின் இடங்கொடாமை எனவும் நோய் வருமுன் இடங் கொடாமை எனவும் உரை செய்யப்படும். இவ்விரு உரையும் சிறப்புடைய வாயினும், நோய் வரு முன் இடங்கொடாமையே விசேடமாம்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய—தற்றது போற்றி யுணின்" எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனர் அருளினர். இதன் பொருள்: ஒருவன் தான் முன் உண்டது அவன் உடற்கு அது ஆகாமையைக் குறிகளாற் றெரிந்து கொண்டு பின் ஏற்றவாறு உண்ணுவனுயின், அவன் உடம்பிற்கு மருந்தென வேறென்றும் வேண்டாவாம்; அவ்வுணவே மருந்து மாகும் என்பதாம். இனிப் பிணி வருதலைச் சுருக்கமாகக் கூறப்புகின் நான்கு வகையெனக் கூறலாம். அவை:—அகம், புறம், ஊழ், பிறப்பு என்பன. அகத்தால் வருவன - மனம் முதலிய அந்தக்கரணம் உணவு முதலானவற்றால் வரும் பிணியாம்; புறத்தால் வருவன ஊறு, தொற்று, வெப்பம் குளிர் முதலான வற்றால் வரும் பிணியாம்; ஊழால் வருவன வினையின் பயன், சாபம், முதலியவற்றால் வரும் பிணியாம்; பிறப்பால் வருவன பெற்றோரினின்று தொடரும் பிணியாம். பிறவிப் பிணியைக் குறித்துக் கூறுவதில் யான் எளியனாகையால் அதனை இங்குக் கூற வியலாதவனாயினேன். உண வென்பதை யெடுத்துக்கொண்டு நாடோறும் நாம் உண்பவற்றிற் குற்றப்படும் சிலவற்றை இங்கு ஆராய்வாம். முதற்கண் காபி, தேயிலை, கோகோ, புகையிலை, வெற்றிலை, புளி என்பவற்றை யெடுத்துக் கொள்வோம். இனிக் காபியானது அரேபி தேசத்தில் அத்தேசத்தினர்களால் முதன் முதலில் கையாளப்பட்டது. அவர்கள் புசிக்கும் ஒட்டக இரைச்சியா லுண்டாகும் கெடுதலை (விஷத்தை)ப் போக்குதற் பொருட்டுக் "காப்பி" யைக் கையாண்டனர். அரேபியர் பண்டைக் காலத்தில் காபிநீர் செய்து அதில் பால் விடாது பேரீச்சம் பழச்சாற்றைப் பெய்து அருந்துவர். காபி பசி தீபனத்தைக் கெடுக்கும்; நரம்பு புடைப்புண்டாக்கும்; கள்ளுண்போன் குடித்த போது முயற்சி யடைந்து பின் தளர்ச்சியடைதல் போலக் "காபி" உண்ணுங்கால் முயற்சியும் பின்பு தளர்ச்சியுமுண்டாம். நித்திரை கெடும்.

இனித் தேயிலையானது சீனதேசத்தில் சீனர்களால் முதன் முதற் கண் கண்டு பிடிக்கப்பட்டது. அவர்கள் மிகுபட உண்ணும் பன்றி யிறைச்சியா லுண்டாகும் கெடுதலைப் போக்குதற் பொருட்டு 'தேயின் நீர்' செய்து அதிற் பாலும் சீனியும் போடாது துவராக அடிக்கடி அருந்துவர். தேயிலையால் பித்தம் மிகும். இதுவும் நரம்பு புடைப்பு, நித்திரைக்கேடு, பசியின்மை முதலியன உண்டாக்கும். இனிக் கோக்கோ என்பது அமேரிக்காவிற் படுவது. அது தேங்காய் போன்ற ஒரு காயின் விதையை வறுத்துப் பொடித்துக் கொதிநீரிற் பெய்து பாலும் சீனியும் சேர்த்து அருந்தப் படுவது. இதுவும் மந்தம் முதலிய சில கெடுதலைச் செய்வது என ஐரோப்பிய மருத்துவரே கூறுகின்றனர். இனிப் புகையிலையானது. முதற் கண் அமேரிக்காவில் கண்டு பிடித்துக் கையாளப்பட்டது. அத் தேசங்களில் குளிர் மிகுதியாலுண்டாகும் வாயிறுகல் நடுக்கங்கள் முதலிய கெடுதல்களைப் போக்குதற் பொருட்டுக் கையாளப் பட்டது.

"கண்புகையும் நெஞ்சுலரும் கைகால் அயர்ந்துவிடும்
வெண்புகையால் மேனி வெளுத்துவிடும்—திண்புகையால்
ஈரல் கருகிவிடும் எப்பலமும் நட்டமாம்
பாழும் புகையிலையின் பண்பு." எனவும்

(முத்துத் தம்பிப் புலவர் 4-வது இலகு போதம்)

"மருந்தை முறித்துவிடும் வாய்வறளச் செய்யும்
திருந்துபல வீனமே சேர்த்து—பொருந்துபித்தம்
உண்டாகும் விந்தை யொழிக்கும் புகையிலையைக்
கண்டார்க்கும் ஆகாது காண்." எனவும்,

(பதார்த்த குண சிந்தாமணி)

ஆன்றோர் கூறியுள்ளர். புகையை யுட்கோடலால் உள்யர்திர மானது இயற்கைத் தன்மை யிழந்து கெட்டுப் போகின்றது; வாய்க்குப் போடுதலால் வாயிலுள்ள அமிர்த நீர் வெளியே யுமிழப்படும்; நாவின் அமிர்தநீர் குறையவே நாவாலுணரும் சுவை கெடும். உணவோடு கலந்து செரிமாணம் ஆவதற்கு எதுவாகிய அமிர்தநீர் குறைந்து விடும். உண்ட உணவு நன்றாகச் செரிமான மாகாது. நாவின்கண் நீரற்றூர் தம் உணவில் மிகுந்த உரைப்பும் புளிப்பும் சேர்க்கவேண்டும் என்று விரும்புவர். இங்ஙனம் உண்ணுதலாலுண்டாகும் கெடுதல் அளவிடற்பாற்றன்று. பொடி யுறிஞ்சுதலால் மூக்கினதும் கண்ணினதும் நீர் குறைந்து விடும்; முகரும் உணர்ச்சி கெடும்; கண்ணானது குழிந்துவிடும்; மூக்கின் வழியாக மூளைக்குப் பொடியின் காரம் தாக்கின் மூளைக்குக் கெடுதலுண்டாம். இனிக் காபி, டீ, கோகோ, புகையிலை என்னும் இந் நான்கையும் சீர் தூக்குவாம். எவ்வெந்த எதுவைக் கருதி யெவ்வெந்த தேசங்களில் ஷை பதார்த்தங்கள் கையாளப் படுகின்றனவோ அக் காரணங்கள் நம் தேசத்திலில்லை. எத்தேசத்தினரின் இரத்தத்தைக் காட்டினும் இந்தியா தேசத்தினரின் இரத்தமானது வெகு தூயதாம். மகா யுத்த காலத்தில் பிரான்ஸ் தேசத்திலே இந்திய வீரர் ஆஸ்பத்திரியையும் ஐரோப்பிய வீரர் ஆஸ்பத்திரியையும் உயரிய இராணுவ மருத்துவர்கள் போய்ப் பார்வை யிட்டனராம். ஐரோப்பிய ஆஸ்பத்திரியில் தீய நாற்றமும், நோயர் விடும் ஊங்காரமும், காயம் ஆறுமையும் காணப்பட்டன. இந்திய ஆஸ்பத்திரியிலோ நாற்றமின்மையும் வேதனைப் படாமையும், காயம் ஆறிவருதலும், முதலியன காணப்பட்டன. இதனால் அம்மருத்துவர்கள் வியப்படைந்தனர். ஆராயுங்கால் ஐரோப்பியர் புலால் மிகுதியாக உண்ணுதலாலும், இந்தியரில் புலாலுண்பவரும், மிகுந்த காய்கனிகள் உண்ணுதலாலும் இங்ஙன முண்டாயிற்றென்று அம்மருத்துவர்களே தீர்மானம் செய்து விட்டனர். இந்தியரின் உணவால் மிகுந்த கெடுதல் இல்லை.

ஆதலால் மாற்றும் வேண்டாம். இப்பதார்த்தங்கள் அயல் தேசத்தார் குடியேறின போதும், வாணியம் செய்ய வந்தபோதும் தாமே குடியேறின; ஆதலால் நம் தேசத்திலுண்டான பொருளே நமக்கு எற்றதாகும். சிலர் ஒரு பதார்த்தத்தோடு பழக்க மடைந்தால் பிறகு அதனை விலக்க முடியவில்லை யென்கின்றனர். எல்லாம் மன மயக்கமே. நாம் மனத்திடத்தில்லை, மனம் நம்மிடத் துண்டு. ஆதலால் மனவுறுதி கொண்டால் எதையும் விலக்கலாம். காப்பி முதலியன கண்டறியாத நம்முன்னோர் தம் கிழத்த வயிதிலும் வலியாராக வாழ்ந்து காலங் கழித்துச் சென்றனர். காபி முதலியன மிகுந்த நம்பிக்கையோடு உண்ணும் நாம் இருபத்தொன்றே முக்கால் வயதிற்குள் கிழத்தனம் அடைந்து வைத்தியர்கட்கும் பூமிதேவிக்கும் நன்மை செய்கின்றோம். நம் தேசமோ வெப்பமுடையது; மூளைக்கும் வெப்பமுண்டாம்; ஆதலால் எண்ணெய் தேய்த்துக்குளிக்கும்வழக்கம்

நம் தேசத்தில் ஏற்பட்டுளது; இத்தனை இடைஞ்சலிலும் மூக்குப்பொடியுரிஞ்சி அது வழியாக மூளைக்குக் காரம் ஏற்றினால் மூளை கெடாமலும் ஞாபகசுத்தி யோசனை முதலியன கெடாமலுமிருக்க வியலுமோ? இனி, வெற்றிலையைப்பற்றி ஆராய்வோம். சில தேசங்களில் அத்தேசத்து மக்கள் உண்டபின் சாந்தியுண்டாகக் கொள்ளும் பதாரத்தங்களைப்போல் இந்தியாவிலும் இந்தியர் உண்டபின் சாந்தியுண்டாக உள் கொள்வது தாம்பூலமாம். செரிமானம் உண்டாதற்குப் பண்டை காலத்தில் உண்டபின் இரண்டொரு வெற்றிலையைத் தின்பர். வெறு+இலை என்பது வெற்றிலையென்றாயிற்று. இதனால் இதன் உட் பொருள் விளங்கும். இவ்விலையின் உரைப்பைத் தணித்தற் பொருட்டுத் துவர் அதாவது பாக்கைச் சேர்த்துக் கொண்டார்கள். பிறகு அத்துவராலுண்டாகும் சோகையைத் தவிர்த்தற் பொருட்டுச் சுண்ணும்பைச் சேர்த்துக் கொண்டனர். பிறகு அச்சுண்ணத்தின் காரத்தைத் தணித்தற் பொருட்டுக் காசிக்கட்டியைச் சேர்த்துக் கொண்டனர். இக்காலத்தில் விறுவிறுப்பையும் போதையையும் வேண்டிப் புகையிலையைக் சேர்த்துக்கொள்கின்றனர். வெற்றிலையைத் தின்பதால் நன்மையும் தீமையுமுண்டு. உண்ட பின் மட்டும் வெற்றிலை போட்டுக்கொண்டால் ஒரு வாறு தீமை செய்யாது. மிகுபடப் போட்டுக் கொண்டாலோ கெடுதல் செய்யும். மேலே சொன்னபடி அடிக்கடி எச்சிலை உமிழ்வதால் நாவிலுள்ள அமிர்த நீர் குறையும். நாவின் சுவை கெடும். உணவில் உரைப்பும் புளிப்பும் மிகுதியாகச் சேர்க்கவேண்டும் என்ற விருப்பமுண்டாகும்; பல்லழகு போம். பல்லின் வேரினது வன்மை குறையும். வெற்றிலையில்லாப்பொழுது பல்வலியுண்டாம். சோகை யென்னும் பிணியுண்டாம். ஆயினும் வெறும் வெற்றிலை யுண்ணின் வாதம் பித்தம் சிலேத்துமங்கள் படியும் என்று "பதார்த்தகுண சிந்தாமணியிற் சொல்லப்படுகின்றது.

இனிப் புளியம்பழத்தை யாராய்வாம். புளியும் உரைப்பும் உணவென்று கூறல் முடியாது. நாவிலுள்ள நீர் ஊறி யுணவோடு கலந்து உட்சென்று உணவைச் செரிமான மாக்குவதற்குபுளியும் உரைப்பும் கையாளப்பட்டன. வெகு காலத்திற்கு முன்பு புளியையும் உரைப்பையும் துவையலாகச் செய்து உண்டு வந்தனர். பின் வந்தோர் புளியையும் உரைப்பையும் குழம்பில் கலந்து கொள்ளுதலை விரும்பிவிட்டனர். உலகில் 165 கோடி ஜனத் தொகையில் தென் இந்தியாவிலுள்ள பெரும்பாலார்தான் புளியையும் உரைப்பையும் உபயோகிக்கின்றவர்கள். தென்னிந்தியர் ஜனத்தொகை சற்றேறக்குறை 6 கோடியாம். அவை போகட்டும், அதன் குணத்தை அராய்வாம்.

"புத்தியும் மந்தம் ஆகும் பெருமியே யுடலூ மூதும்
பத்தியந் தவறும் சன்னி பாதமாம் சுரங்கள் வீறும்
சத்தியும் பித்தம் தீரும் தனுவெலாம் வாத மேறும்
மத்திபம் தாது புட்டி வரும்திரை நரை புளிக்கே."

(பதார்த்த குண சிந்தாமணி)

புளிதின்றால், புத்திமர்த முண்டாம்; உடல் முதிர்ச்சியடையும்; மருந்துகளின் சத்துகெடும்; சன்னிபாத சுரமுண்டாம்; பித்தம் தீரும் உடம்பெல்லாம் வாதமேறி யூதல் காணும்; இந்திரியம் கெடும்; நரையும் திரையுமுண்டாம் என்று இப்பாசுரத்தால் அறிந்து கொண்டோம். பழம்

புளியானது பித்தத்தையும் பித்தத்தாலுண்டாகும் பிணியையுங்குணப்படுத்தும் என்பர். விரிக்கிற் பெருகுமென்றஞ்சி யெடுத்துக்கொண்ட பொருளையித்துடன் நிறுத்தினேன். கடவுள் நமக்குப் பகுத்தறிவு கொடுத்துளார். அது, இது நல்லது இது தீயது எனப்பகுத்தறிதற் பொருட்டே. ஆதலின், உண்ணுதல், முகருதல், காண்டல், கேட்டல், ஊறுதல் முதலாக நாம் செய்யும் செய்கைகள் யாவும் செய்யப்படு முன்னம் அது பயனுடையதா இல்லாததா என்று சீர்தூக்கிப்பார்த்துப் பின் செய்தால் குற்றம் உண்டாகாது. தெரியா திருந்தமட்டும் ஆகாதன செய்தோம்; இனித் தெரிந்தபின் ஆகாதவற்றைச் செய்யாதொழிவது நலமன்றோ ? காபி முதலியன பருகுதலைக் காட்டிலும் சுக்கு, கொற்றமல்லி, ஆவாரம்பூ என்பவற்றைக் கொதிநீரில் போட்டு இறக்கிப் பால் சீனி போட்டு அருந்திவந்தால் மிகுந்த நன்மை யுண்டாம். விருப்பமிருப்பின் மட்டும் தாம்பூலம் போட்டுக்கொளலாகும்.

புகையிலை கூடவே கூடாது. ஆனால் வாயுதேகமானால் புகையை உட்கொள்ளாமல் வாய்மட்டும் கொண்டு வெளி விடுவது சிலர் வழக்கமாக விருக்கிறது. புளியம் புளிப்பைக் காட்டிலும் மோர், எலுமிச்சை முதலான புளிப்புகள் மிகச் சிறந்தன. பெருமைக்காகவோ வழக்கத்திற்காகவோ நாம் எதையும் உண்ணக்கூடாது; ஆனால், நம் உடம்பின் சுகத்திற்காகவே உண்ண வேண்டும். இக்கட்டுரை யெழும்பினது பிறர் பழக்கத்தைக் கண்டிப்பதற்கன்று. அப் பழக்கங்களிலுள்ள தீமையை யெடுத்துக் காட்டுதற்கென்க. அன்பர்கள் இதைப்படித்து இதன் உண்மையை யறிந்து அதற்கேற்றப் பழக்கம் செய்து கொள்ளுதலே இதற்குக் கைமாறாகும்.

வே. துரைசாமி,
சுவாமிமலை.

குறிப்பு:—நண்பாகள் இத்தகைய விஷயங்களைக் கவனித்து வாசிக்க வேண்டுகிறோம். வாசிப்பதால் மட்டும் பயனில்லை. இதிலுள்ள விஷயங்களைக் கவனத்தில் வைத்து அதன்படி நடப்பதே அறிவாளிகளின் இலட்சணமாகும். நண்பர் கூறுமாறு கௌரவத்திற்காவது நாவின் உருசிக்காவது ஆசை வைத்து, ஏதோ அவசிய காரணத்திற்காக அன்னிய நாட்டார் உபயோகித்தவைகளை, அக்காரணம் சிறிதுமில்லாதவர்களும் அதற்கு நேர்மாறான காரணமுடையவர்களுமாகிய நாமும் உபயோகிப்பது வலியத் தீங்கு தேடிக்கொள்வதாகும். நோயுடை யொருவன் புசிக்கும் ஔடதத்தை அந்நோயில்லா ஒருவன் அருந்தின் கட்டாயம் தீங்கடைவான் என்பது நிச்சயமன்றோ ! பத்திரிகாசிரியர்.

பூர்வீக இந்தியாவில் இரணவைத்தியம்.

[இஃது ம-ா-ா-ஸ்ரீ இராவ் ஸாஹேப் R. கிருஷ்ணராவ் போன்ஸ்லே அவர்களால் 1919ஸு மார்ச்மீ வெளியான "ஸௌத் இந்தியன் ரிஸர்ச்" என்ற சஞ்சிகையினின்றும் மொழி பெயர்த் தெழுதப்பட்டது.]

தன்வந்தரி முனிவர் தமது சீடர்களை நோக்கி ஆயுர்வேதத்தின் எப்பாகத்தை யுங்களுக்குப் போதிக்கும் படி கேட்கிறீர்கள் என்று வினவிய போது அவர்கள் அவரை நோக்கி, "சுவாமி எல்லாவற்றையுமே எங்களுக்

குப் போதியுங்கள். ஆனால் இரணவைத்தியமே தாங்கள் கூறுவதற்கெல்லாம் அஸ்திவாரமாக விருக்கவேண்டும்'' என்றார்கள். தன்வந்தரி என்ற வார்த்தையில் தனு என்பதற்கு (தேகம்-அங்கம்) அங்கச்சேத சாத்திரம், இரணவயித்தியம் என்று பொருள். 'அந்தரி, என்றால் அச்சாத்திரத்தில் வல்லுனர் என்று பொருள். தன்வந்தரி தேவர்களுக்கு வைத்தியர். அவர்கள் அசுரர்களோடு யுத்தம் செய்து அடைந்த காயங்களை அவரே சிகிச்சை செய்து ஆற்றுகின்றவர்.

இக்காலத்தில் வைத்தியத்தின் அந்தப் பிரிவு இந்தியாவில் எவ்வளவு அலட்சியம் செய்யப்படினும் பூர்வீக இந்துக்கள் இரணவைத்தியத்தில் அடைந்திருந்த ஞானத்தைப்பற்றி டாக்டர் எயின்ஸ்லீ (Dr. Ainslie) என்பவர் பின் வருமாறு கூறியிருக்கிறார்:—

ஆயுர்வேதத்தின் முதல் இரண்டு உட்பிரிவுகளாகிய சாலியா, சாளக்யா என்பவற்றைப் பற்றிக் கூறியிருப்பதினின்றும், அவைகள் இரண வைத்தியத்தைப்பற்றியே கூறுகின்றன வென்று மதிக்கலாகும். சுஸ்ருஷருடைய நூலுக்கு எழுதப்பட்டிருக்கும் வியாக்கியானத்தின் முதற்பாகத்தில் இரண வைத்தியத்தைப்பற்றிய மிக்க அருமையான அநேக நிரூபணங்கள் தெளிவாய் விவகரிக்கப்பட்டிருக்கின்றன வென்பது நிச்சயமென ஐயமறக் கண்டறியப்பட்டிருக்கிறது. அந்த வியாக்கியானத்தின் பாகத்திற்கு சூத்ரஸ்தான நிரூபணங்கள் என்று பெயர். சாதாரண ஔஷதச் சிகிச்சை அந்த நூலின் பிரதானக் கருத்தல்ல வென்றும் இரண வைத்தியமே அதன் பிரதானக் கருத்தென்றும் விளங்குகிறது. இரண வைத்தியத்தில் ஆயுதப்பிரயோக பாகம் எட்டு விதங்களாக விருக்கின்றன என்பதற்கு முதல் தரமான பிரமாணங்களுள.

1. சேதனம் (சேதித்தல்)—அதாவது அறுத்தல் அல்லது துண்டித்தல்.
2. இலேகனம்—இதற்குக் கீறுகிறது என்பது பொருள். அம்மைகுத்தும் போது செய்கிறது முதலியவை.
3. வியாதனம்—துவாரம் செய்தல்.
4. ஏஷியம்—உட்சோதனை. இரணம் முதலியவைகளுக்குச் சலாகையால் மருந்தை உட்செலுத்தல் முதலியன செய்தல் இதைச் சேர்ந்தவை.
5. ஆஹாரியம்—வெளி யெடுத்தல் அதாவது துர் மாமிசம் முதலிய குற்றங்களை வெளியிலெடுத்து விடுதல்.
6. விஸ்ராவணம்—திரவ பதார்த்தங்களை வெளியில் வரச்செய்தல்.
7. சேவனம்—தைத்தல்.
8. பேதனம்—பிரித்தல்—அல்லது அறத்துணித்து எடுத்து விடல்.

இந்துக்கள் சத்திர மிடுவதில் உபயோகப்படுத்திய ஆயுதங்கள் அனேகமாக விருந்திருக்கின்றன. இவற்றிற்குச் சாதாரணமாய் எந்திரங்கள் என்று பெயர். அவற்றில் அனேக ஆயுதங்கள் (ஸஸ்த்ரங்கள்) சேர்ந்திருக்கின்றன. அவை ஒவ்வொன்றிற்கும் அததன் உபயோகத்திற்குத் தக்கபடி பெயரிடப்பட்டிருக்கிறது.

சந்தான்ஸா=குறடு
சூசி=ஊசி
தந்தலன்கு=பல்லாயுதங்கள்
அர்த்தாதரா=கத்தி
குசாரிகா=(Bistouries)

கரபாத்ரா=வாள்
நாரி=குழாய் ஆயுதங்கள்
மந்தாலக்ராம்=இருபக்கங்களிலும், முனையிலும் கூருடைய சிறு கத்தி

5

காயங்களுக்குக்கட்டும் மேல்கட்டில் உத்பட்டா அல்லது பாக்பட்டா கூறுகிறபடி பதினுன்கு விதங்கள் இருக்கின்றன. முற்காலத்தில் எப்படியிருந்திருந்தாலும் இக்காலத்தில் இந்தியாவில் அதிலும் தென்னிந்தியாவில் இந்துக்களால் இரணவைத்தியம் சாமர்த்தியத்தோடு ஒழுங்காய்ச் செய்யப்படுவதில்லை. ஆனால் பூட்டு விலகிவிட்டால் கட்டுகட்டிச் சுகப்படுதல் முதலிய இத்தகைய சிகிச்சைகளை மட்டும் செய்பவர்களுளர்.

டாக்டர் புஷ்மான் கூறுகிறர் :—

"இந்தியர் இரண வைத்தியத்தில் மிக்க அபூர்வசக்தி பெற்றிருந்தார்கள். இந்திய டாக்டர்கள் அவயவத்தைத் துண்டித்தல், நீர்ப்பையிலுள்ள கல்லைச் சத்திரமிட்டு எடுத்தல், குடலேற்றத்தைச் சரிப்படுத்தல், நீரடைப்பை நிவர்த்தி செய்தல், கண்பார்வைக் குறைவைப் புரையுரித்துச் சரிப்படுத்தல், பிரசவத்தில் சிசுவைத் திருப்புதல், வெளியிலெடுத்தல், முதலிய அனேகம் வேலைகளைச் செய்தார்கள். இரண வைத்தியத்திற் கென்று அவர்களிடமுள்ள அனேகமான ஆயுதங்களால் அவர்கள் அதில் எவ்வளவு அனுபோக மடைந்திருந்தார்க ளென்பது விளங்குகிறது.

ஸுஷ்ருத ஸம்ஹிதையின் ஆங்கில மொழி பெயர்ப்புக்கு தாம் எழுதிய முன்னுரையில் டாக்டர் கெ. யல் பிஷக்ரத்ன (Dr. K.L. Bhishagratna) என்பவர் பின்வருமாறு கூறுகிறார்:—

"மேல் நாட்டார் கண்டறிந்த வைத்திய சாத்திரங்களில் அங்கச்சேத சாத்திரம் அதாவது சேதித்து உள் அங்கங்களின் வித்தியாசங்களை யாராய்ந்தறியும் சாத்திரம் ஓர் பெரிய சித்தியென்பது உண்மையாகவே மறுக்கொணாத விஷயமாகும். ஆனால் அதில் அறியவேண்டும் விஷயமாவது தேகத்திலுள்ள அமைப்புகள் புலப்படும்வண்ணம் லான்ஸெட் என்ற கத்தியால் பிளந்து காட்டுவது திருப்தியான வழிதானு வென்பதே. ஏனெனில் ஏக காலத்தில் தோலைப் பிரித்தெடுக்கக் கத்தியை இலக்ஷயமில்லாதபடி இஷ்டம் போல் உபயோகித்தால் சர்மத்திலுள்ள மிக்க சன்னமான இரத்தக் குழாய்களெல்லால் வெளிப்படாமலே போகின்றன வென்பதும், தசை நாருகளுக்குள் கத்தியை ஆழமாகச் செலுத்தினுற்றுன் அங்கு புதையுண்டிருக்கும் மேற்படி இரத்தக் குழல்களும் சன்ன நரம்புகளும் வெளிப்படு மென்பதும் உண்மை. இதற்குமாருக அங்கச் சேதத்தை அனுபவமாகச் செய்வதைக் குறித்து ஸுஷ்ருதாவில் கூறியிருக்கும் விதிகளைக் கவனியுங்கள். அது சரித்திரங்கள் எழுதப்படாத அவ்வளவு பூர்வீக காலத்தில் கண்டறியப் பட்டதாயினும், புதிதாய்க் கண்டறியும் சாமார்த்தியத்திலும், தோஷமின்மையிலும், குறைவின்மையிலும் இதுகாறும் கண்டறியப்பட்ட எல்லா வழிகளையும் அது மிக அற்பமானவைகளாகச் செய்து விடுகிறது. அதில் கூறியுள்ள இந்து சத்திரமிடுமுறைமை பின்வருமாறு:—

"அங்கச் சேதம் செய்து தேகத்திலுள்ள அவயங்களின் அமைப்பு பொறுத்தம் முதலியவற்றை அறியவேண்டுமாயின் ஒரு சவத்தைத் தருப்பைப் புல்லால் மூடி அதை ஒரு சிற்றாற்று நீரின் பக்கத்தில் கரையில் வைக்கவேண்டும். மூன்று நாட்கள் கழித்து அதை மிக்க ஜாக்கிரதையோடெடுத்து மேற்றோல், வேதனி என்னும் உள் சர்மம், இவற்றின் அடுக்குகளை நிதான்மாக எடுத்துவிட்டு, பிறகு கீழிருக்கும் தசை நார்களை மிருதுவான மயிர்க்கற்றையால் (Brush புருஷ்) மேல் வாட்டாக மெதுவாய் ஒரு

முறை சுறண்டி யெடுத்துவிட வேண்டும். இப்படிச்செய்வதால் கண்ணுக்குத் தெரியாதிருந்த மிகச் சிறிய இரத்தக் குழல்கள் கூட, இப்போது ஊதிப்போய் இருப்பதால், பிரத்யட்சமாகக் கண்ணுல் பார்த்து கையால் தொட்டறியக் கூடிய விதமாய் எங்கும் புலப்படும்.

அங்கச் சேதம் செய்யும் முறைமையைக் கூறும் ஸுஷ்ருத ஸம்ஹிதையில், இதற்காகத் தெரிந்தெடுக்கப் படும் சவம் அங்கயீன மில்லாமலும், கிட்டத் தட்ட நூறுவயது சென்ற ஆளின் சரீரமாக இராமலும், விஷத்தாலாவது நீடித்த வியாதியாலாவது மடிந்த ஆளின்தேகமாக இராமலும் இருக்க வேண்டு மென்று கூறப்பட்டிருக்கிறது. முதலில் அச்சவத்தின் குடல்களிலுள்ள மலத்தை யெடுத்து விட்டு, தனியிடத்தில் நிலையான ஜலத்தில் அது அழுகும்படி வைக்கப்பட வேண்டும். தேகத்தின் மேல் தருப்பைப் புல் முழுமையும் சுற்றி கயிற்ருல் கட்டி மீன் முதலிய தின்னு வண்ணம் ஒரு கூட்டில் பத்திரமாக அது வைக்கப்பட வேண்டும்.

ஏழு நாட்கள் கழித்துப் பார்த்தால் தேகம் பூரணமாக அழுகிப்போயிருக்கும். அப்போது புல்லின்வேர், வெற்றிவேர், மயிர், தருப்பைப்புல் இவற்ருல் கட்டப்பட்ட கற்றை (புருஷ்) யால் அல்லது மூங்கில் தப்பையால் அழுகிப்போன சர்மத்தை மெதுவாகச் சுறண்டி யெடுத்துவிட்டு சர்மம் முதல் வெளியிலும் உள்ளுமுள்ள பலவித அங்கங்களையும் கண்களால் கவனித்துப் பார்க்கவேண்டும்.

முற்காலத்தில் எப்படி யெப்படி எதெதைச் செய்திருந்தபோதிலும், சவத்தை யங்கச் சேதம் செய்து சோதித்துப்பார்க்கும் வழக்கம் இந்துக்களுக்குள் இப்போதில்லை யென்பது விசனிக்கத்தக்க விஷயமே. இப்போதிருக்குப் பிராம்மண சித்தாந்தங்கட்கு அது விரோதமாக விருக்கிறது. தஞ்சாவூரில் அரசாக்ஷி செய்த சரபோஜி மகாராஜா நல்ல அறிவாளி யென்றும், சாத்திர ஆராய்ச்சியில் விரும்ப முடையவரென்றும் விசேஷப்பிரசித்துப் பெற்றவர். அவர் மனித தேகத்தின் அவயவ அமைப்புகளை யுணர வேண்டுமென்று மிக்க ஆவல் கொண்டிருந்தார். அவர் சவத்தை அங்கச் சேதம் செய்து பார்த்து தன் விருப்பத்தை நிறைதேற்றிக் கொள்வது தம் இந்துமதாசாரத்திற்கு மாருக நடப்பதாகுமென்று அப்படிச் செய்யாமல், இங்கிலாந்திலிருந்து தந்தத்தினுல் மனித தேகத்தின் எலும்புக் கூடொன்று செய்தனுப்புமாறு ஏற்பாடு செய்தார். நான் அதைத்தஞ்சாவூர் அரண்மனையில் கண்டபோது அது தந்தத்தால் செய்யப்பட்டதென்று கருதியிருக்க வில்லை.

இரணவைத்திய சம்பந்தமான வேலைகளில் தேர்ச்சியடையும் பொருட்டு தன்வந்தரி, ஸுஷ்ருதா முதலியவர்களுடைய சீடர்கள் முதலில் தேகத்தின் அவயங்களைப் போன்று செய்யப்பட்ட வஸ்துக்களைப்பன் முறையறுத்துப் பார்த்த பின்பே தேகத்தையே அறுக்க அனுமதியளிக்கப் பெறுவார்கள். உபாத்தியாயர் அங்கச்சேதம் செய்யும் விதங்களைப்பற்றியும் மேலுக்குச் சிகிச்சை செய்யும் மார்க்கங்களைப் பற்றியும், பொதுவாக அனுபவமாகச் செய்யவேண்டிய எல்லா விஷயங்களைப்பற்றியும் சீடர்களுக்குப் போதிக்க வேண்டுமென்றும், ஏனெனில் அனுபவமாகப் பயிற்சியடையாமல் பிரசங்கங்களைக் கேட்பதாலும் பன்முறை வாசிப்பதாலுமே ஒருவரும் வயித்தியம் செய்யத் தகுதி யுடையவர்க ளாகார்களென்றும் ஸுஷ்ருத ஸம்ஹிதையில் கூறப்பட்டிருக்கிறது. (தொடரும்.)

கற்கோட்டை—நாவல்

(479-ம் பக்கத்தொடர்ச்சி)

அம்மனிதர்.—"வேண்டாம். அது அனுவசியம்" என்றார்.

சகோதரர் (அவரைநோக்கி).—"எங்கள் செய்கைக்குத் தாங்கள் ஆக்ஷேபனை செய்யாததோடு எங்களிடமுள்ள இந்த அதிகாரக் குறியைக் கொண்டு நாங்கள் அளவு மீறியாவது அக்ரமமாயாவது நடப்பதாய்த் தாங்கள் கருதாதிருக்க வேண்டிக் கொள்கிறோம்" என்று கணையாழியைக் குறிப்பாய்க் காட்டினார்கள்.

அந்த மனிதர் அதைக் கண்ட உடனே ஒருவிதப் புன்னகை புரிந்து பிரபுக்களே, "உங்களிடம் ஒரு வார்த்தை கூறவேண்டும்" என்று அருகில் வரும்படி சமிக்கை செய்தார்.

சகோதரர்க்கு உடனே மனக்கலக்க முண்டாகி யொருவர் முகத்தை யொருவர் நோக்கினார்கள். சற்று நேரத்திற்குள் மூவரும் எட்டச் சென்று நின்றதே, அப்புது மனிதர் அவர்க ளிருவரையும் நோக்கி,

"நான் முன்னமே பணம்கொடுத்து வாடகைக்குஅமர்த்திக் கொண்ட இந்த இரண்டு குதிரைகளும் உங்களுக்கு அவசியம் வேண்டியதாயிருக்கிறது. நான் கொடுப்பதிற் றடையில்லை. நீங்களும் எனக்கொரு பிரதியுபகாரம் செய்வதாய் வாக்களிக்க வேண்டும். உங்களிடத்தில் இருக்கும் கணையாழி யுங்களிடம் எப்படி வந்ததென்று எனக்குத் தெரியும்" என்றார்.

இதைக்கேட்டதே சகோதரர் இருவர்க்கும் மிக்க வியப்பும் திகிலும் உண்டாயிற்று. ஆயினும் அம்மனிதனுடைய முகக்குறியால் அவன் கெம்பீரமான நடக்கை யுடையவ னென்றும், சூது செய்பவ னல்ல வென்றும் அறிந்து கொண்டார்கள். ஆகையால் அவர் கேட்ட படியே பிரதி யுதவி செய்வதாய் வாக்களித்து விட்டார்கள். அதன்மேல் அவர் நீங்கள் எத்திக்கை நோக்கிச் செல்கிறீர்களென்று வினவ,சகோதரர்கள் தெற்கு என்றார்கள். அவரும்தெற்கேயே செல்வதால் மூவரும் உடனே புறப்பட்டார்கள்.

புதுமனிதர் வழிகாட்டியாய் முன்னே நடந்தார். அவர் இவர்களை நோக்கி "பிரபுக்களே! நீங்கள் இவ்வூரை விட்டுச் சீக்கிரம் நெடுந்தூரம் செல்ல ஆத்திரப் படுகிறீர்களென்று நான் அறிவேன். ஆகையால் வேகமாய்க் குதிரையை விடுங்கள்" என்றான்.

அவ்வாறே மூவரும் நெடுந்தூரம் சென்ற பிறகு சகோதராிருவரும் புது நண்பரை நோக்கி, "நண்பரே! இரண்டொரு விஷயங்களைப்பற்றி அறிந்து கொள்ள மிக்க ஆவலுடையவர்களா யிருக்கிறோம். அவை யெவை யெனின், முதலாவது இக்கணையாழியைப்பற்றிய விஷயம் தங்களுக்கெப்படி தெரிந்தது? இரண்டாவது ,நாங்கள் எங்களைச் செய்யவேண்டு மென்று விரும்புகிற பிரதி யுபகாரம் எத்தன்மையது? மூன்றாவது இவ்வளவு மர்மத்தோடு எங்களுக் குதவிபுரிந்த தங்கள் நாமதேயத்தை யறியவிரும்புகிறோம்" என்று மொழிந்தார்கள்.

அப்புது மனிதர் இவர்களை நோக்கி,

"பிரபுக்களே! உங்களுக்கும் என்னிடம் இன்னும் பூரண நம்பிக்கையுண்டாகாதிருப்பது சுபாவமே. ஆயினும் நான் கூறுவதைக் கேளுங்கள். நீங்களும் உங்கள் தமையனும் ஒருகாரணமுமின்றி அரசியால் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருப்பதும், நீங்கள் சத்தியாவன்களென்பதும், நிரபராதிகளென்பதும், அநீதியாய் இம்சிக்கப்படுகிறீர்களென்பதும் நான் நன்றாயறிந்ததே. இதனாலேயே நான் உங்களுக்கு மித்திரனேயென்று நீங்கள் அறிந்துகொள்ளலாம். இப்போது நீங்கள் தெற்குநோக்கிச் செல்வதால் இந்திரபுரியில் சிறையாக்கப்பட்டிருக்கும் உங்கள் தமையனை விடுவிக்க எண்ணம் கொண்டு செல்கிறீர்களென்று உத்தேசிக்கிறேன். நண்பர்களே! அப்படியாயின் என் எச்சரிக்கையைக் கேளுங்கள். அங்கு செல்வது உங்களுக்கு ஆபத்தாய் முடியுமேயன்றி வேறில்லை. ஏனெனில் தற்சமயம் உங்களுக்குச் சொல்ப உதவியேனும் செய்யத்தக்கவர்கள் அங்கு ஒருவருமில்லை. உங்கள் அம்மானாகிய சுந்தரநாயகம் பிரபு இன்று திடீலென்று இறந்து போனார்......" என்றதே.

சகோதரர்.—"ஆ! அதெப்படி யுமக்குத் தெரியும்?" என்றார்கள்.

புது மனிதர்.—"நான் மாலை அவர் மாளிகை யோரமாய் வரும்போது சங்கதி கேள்விப்பட்டேன். விபரம் ஒன்றும் தெரியாது. அவர் புத்திரனாகிய காப்டென் தினகரன் நான்கு நாட்களுக்குமுன் எவ்விதமாகவோ இராணியின் வெறுப்பிற்கும் கோபத்திற்கும் ஆளாகிச் சிறையாக்கப் பட்டிருக்கிறான்" என்றார்.

இதைக் கேட்டதே இருவரும் திடுக்கிட்டார்கள்.

புது நண்பர்.—"ஆகையால் நீங்கள் அங்குசெல்ல வேண்டாம். கடவுள் தயவால் யார்மூலமாகவாவது நீங்கள் எதிர்பாராத தக்கசகாயம் உண்டாகும். அப்போது நாம் மனம் ஒருமித்துத் துணிந்து சென்றால் உண்மையான ஜயமடையத் தடையில்லை" என்றார்.

இரண்டு சகோதரர்களும் சந்தோஷமடைந்து "ஆ! தங்கள் மூலமாய்த்தான் அவ்வுதவி கிடைக்கப்போகிறது. தெரிகிறது. ஓ உத்தம நண்பரே!......" என்றபோது,

நண்பர்.—"சும்மா விருங்கள். ஆத்திரப்பட்டு அதிக நம்பிக்கை வைத்து விடாதீர்கள். கடவுள் நம்மைக் கைவிடமாட்டார். இப்போது நான் உங்களைக் கேட்கப்போகும் உதவி உங்களிடமிருக்கும் கணையாழியின் உதவியாலேயே நிறைவேற வேண்டும்" என்றார்.

சகோதரர் இருவரும் ஒரேவாக்காய் "கூறுங்கள். எதுவாயினும் தடையின்றிச் செய்யச் சித்தமா யிருக்கிறோம்" என்றார்கள்.

அதற்கு அந்த நண்பர் "சற்று பொறுமையா யிருங்கள். அதற்கு வேளையின்னும் வரவில்லை. துரிதமாய் நடப்போம்" என்றார்.

அவ்வாறே குதிரைகளைத் தட்டி வேகமாய் அனேகம் மைல்கள் செப்பனிட்ட இராஜபாட்டையிலும், குறுக்குப் பாதைகளிலும், கொல்லை மேடுகளிலுமாய்ச் சென்றார்கள். சகோதரர்களுக்கு அப்பாதைகள் எங்கு செல்கின்றன வென்றும், அது எந்த ஜில்லா வென்றும் ஒன்றும் தெரிய வில்லை.

அந்த நண்பர்மட்டும் அப்பாகங்களில் ஒவ்வொரு அடிப்பூமியும் நன்ருய் அறிந்தவரென்றே புலப்பட்டது. கடைசியில் குதிரைகளும் களைத்துப் போகவே ஒரு சிறு தோப்பில் தங்கிஞர்கள். அங்கிருந்து சுமார் கால் மைல் தூரத்திலுள்ள ஒரு மேட்டின்மேல் பாதி கோட்டை போன்றதும் பாதி மாளிகை போன்றதுமான ஒரு பிரம்மாண்டக் கட்டிடம் புலப்பட்டது.

புது நண்பர் சகோதரர்களை நோக்கி, "நண்பர்களே! நீங்கள் செய்யப் போகும் உதவி அதோ அக்கட்டிடத்தில்தான் நடைபெறவேண்டும். நீங்கள் அதைமட்டும் செய்து விட்டால் நான் துணிகரமாய் உங்கள் விஷயத்தில் பூரண உதவி செய்வேனென்று மனப்பூர்வமாய்ப் பிரதிக்ஞை செய்கிறேன்" என்ருர்.

அவ்வாறியம்பிக் கொண்டே அவர் தன் அசுவத்தினின்றும் இழியும் போது, சகோதரர்ருவரையும் இறங்கவேண்டாம் என்றதால், அவர்கள் புரவிகளின் மேலேயே யிருந்தார்கள். அவர் அவர்களைநோக்கி, "இப்போது நான் கூறுவதைக் கவனமாய்க் கேளுங்கள். அந்த மாளிகைக்கு வசந்த மாளிகை யென்று பெயர். இப்போது அதன் சொந்தக்காரியா யிருப்பது வேதநாயகிச் சீமாட்டி என்ற வயதுமுதிர்ந்த ஒருவிதவை. நீங்கள் இந்தத் தோப்பைச் சுற்றிக்கொண்டுபோய் அம்மாளிகையின் மறுபக்க வாயில் வழியாய்ச் செல்லவேண்டும். ஏனெனில் நீங்கள் இந்திரபுரியிலிருந்து துரிதமாய் வந்ததாய்க் கூறவேண்டும். இராணியிட மிருந்துவந்தோம் என்ருல் தான் அவள் கதவைத்திறந்து உங்களுக்குத் தரிசனமளிப்பாள். அதன் பின் இராணியின் அதிகாரக்குறியாகிய கணையாழியைக் காட்டி நாங்கள் ஷண்பகவல்லியிடம் இரண்டொரு வார்த்தை கூறவேண்டு மென்ருல், அவள் அப்படியே அனுமதி கொடுப்பாள். நீங்கள் செய்ய வேண்டிய தெல்லாம் ஷண்பகவல்லியை உலவ அழைத்துச் செல்வதுபோல் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று நான் அவளைச் சந்திக்கச் செய்யவேண்டும். அம்மூதாட்டி செய்கிற உபசாரத்தை யேற்றுக்கொள்ளுங்கள். 2, 3, மணிநேரம் தங்கவேண்டிய தாயினும் சம்மதியுங்கள்" என்ருர். சகோரதர்கள் "ஷண்பகவல்லியிடம் தங்கள் பெயரைக் கூறவேண்டாமோ?" என்ருர்கள்.

புது மனிதர் சற்று சிந்தித்து, "இல்லை. அவசியமில்லை. அவள் தெரிந்துகொள்வாள். இனி நீங்கள் செல்லலாம். உங்களுக்கு நான் அதிகம் கூற வேண்டுவதில்லை" என்ருர்.

சகோதரர் இருவரும் உடனே புறப்பட்டு அத்தோட்டத்தைச் சுற்றிக்கொண்டு சென்ருர்கள். வழியில் இளையவன் மூத்தவனைநோக்கி "இந்த ஆள் யார்? என்ருன்.

மூத்தவன்.—"இந்த ஆள் மிக்க செல்வாக்கும் உயர்பதவியுமுடையவன் என்பதில் சந்தேகமே யில்லை. நம்மை யனுப்பிய சங்கதி ஏதோ காதல் விஷயத்தைப் பற்றியது. எதுவாயினும் சரி, நாம் செய்தே தீரவேண்டும்" என்ருன்.

இளையவன்.—"ஆகா! தடையின்றி செய்யவேண்டியதே" என்ருன்.

அதற்குள் இருவரும் வசந்தமாளிகை வந்து சேர்ந்தார்கள். அதன் வாயிலில் வந்ததும் புரவிகளை விட்டிறங்கி கதவைத் தட்டினார்கள். உடனே உள்ளிருந்து ஒரு ஆள் வந்து கதவைத்திறவாமலே கதவிலிருக்கும் ஒரு சிறு பலகணியைத்திறந்து நீங்கள் யார்? என்றான்.

மூத்தவன்.—"கதவைதிற! நாங்கள் இராணியிடமிருந்து வருகிறோம்" என்றான்.

வாயில் காப்போன்.—"யாராயிருப்பினும் தக்க அத்தாட்சி காட்டினால் தான் கதவு திறக்கப்படும்" என்றதே,

மூத்தவன் கோபத்தோடு இதோ பார் என்று கணையாழியைக் காட்டினான்.

உடனே கதவு திறக்கப்பட்டதும், இருவரும் உள்ளே சென்று மாளிகையின் சொந்தக்காரியாகிய வேதநாயகிச்சீமாட்டியைக் கண்டு கணையாழியைக் காட்டி "நாங்கள் இராணியின் கட்டளைப்படி வந்தோம். நாங்கள் இங்கு வசிக்கும் ஷண்பகவல்லி யம்மாள் என்ற மாதைக்கண்டு வார்த்தையாடவேண்டும். இராணி அம்மாதைப் பூரணமாய் மன்னிக்கப்போகிறாள். அதற்கு அத்தாக்ஷியாய் இதுகாறும் இங்கு சிறையிலிருப்பதுபோ லிராமல் இனிசுயாதீனமாய் நினைத்தபோது தோட்டத்தில் சென்று உலவிவரலாம் என்று நாங்கள் கூறி, அப்படியே அம்மாதை யழைத்துக் கொண்டு தோட்டத்தில் உலவச் செய்து இராணிகூறிய புத்திமதிகளைக்கூறி இராணியின் அன்பில் நம்பிக்கைவைத்து இராணியின் ஏற்பாட்டின்படி இணங்கி நடப்பதாய் அம்மாதிடம் வாக்குத்தத்தம் பெற்றுக்கொண்டு செல்லவேண்டும்" என்றார்கள்.

அம்மூதாட்டி "இராணியின் கட்டளைக்கு மாறாய் நடக்க நினைப்போரு முண்டோ. இதோ இரண்டுவினாடியில் ஷண்பகவல்லியை உலவப் புறப்படும்படி ஆயத்தப் படுத்திவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்று, பத்து நிமிடங்களில் திரும்பிவந்து சகோதரர் இருவரையும் அழைத்துச் சென்று ஷண்பகவல்லிமுன் விட்டுவிட்டுத் தான் திரும்பிச் சென்றாள்.

ஷண்பகவல்லி மிக்க கலவரத்தோடு "இருவரையும் நோக்கி "இதென்ன சமாசாரம்? தயவுசெய்து கூறுங்கள்" என்றாள்.

மூத்தவன்.—"அம்மா. நீ பயப்படவேண்டிய காரணமேயில்லை. இங்கே இரகசியமாய் வார்த்தையாடலா மல்லவா" என்றான்.

ஷண்பகவல்லி.—ஆ! அப்படியானால் நீங்கள் அம்மாதிடம் கூறிய துண்மையல்ல. நீங்கள் இராணியிடமிருந்து வந்தவர்களல்ல.

மூத்தவன்.—தங்களைக்காண மிக்க ஆவலோடு வெளியில் காத்திருக்கும் ஒருவரால் அனுப்பப்பட்டவர்கள்.

ஷண்.—ஓகோ! தெரிந்துகொண்டேன். என்னை இக்கட்டிடத்தி லிருந்து வெளியில் அழைத்துச்செல்ல இப்படி தந்திரம் செய்தீர்கள்போலும்.

மூத்தவன்.—"ஆம் ஆம். துரிதமாகப் புறப்படவேண்டும்" என்றான்.

உடனே ஷண்பகவல்லி வேதநாயகியால் அப்போதுதான் தன்னிடமளிக்கப்பட்ட சாவியால் தோட்டக்கதவைத் திறந்துவிட, மூவரும்தோட்டத்திற்குள் நுழைந்து துரிதமாய் நடந்தார்கள். (தொடரும்)

ஆறணி-குப்புசாமி முதலியார்.

“ஆனந்தபோதினி” பஞ்சாங்கம்

ரௌத்திரி௵ வைகாசி௴—சாலிவாகனம் 1843-கலியுகாதி 5022

பசலி 1329-30—கோல்லம் 1095-96 - ஹிஜரி-1338-39

இங்கிலீஷ் 1920-ம்௵ மே௴—ஜூன்௴

வைகாசி௴	ஏப்ரல்	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	14	வெ	ஏ-31-42	உத்-49-28	சித்-49 அ	
2	15	ச	து-29-4	ரே-48-12	ம-48 சி	
3	16	ஞா	தி-25-6	அசு-46-2	சி-46 பி	
4	17	தி	ச-20-46	பர-43-3	சித்-43 ம	
5	18	செ	●-15-31	கிரு-39-32	சி அ-60	
6	19	பு	பிர-9-53	ரோ-35-37	சி-60	
7	20	வி	து-3-47	மிரு-31-26	ம-60	
8	21	வெ	ச-51-33	திரு-27-8	சித்த-60	
9	22	ச	ப-45-49	புன-23-25	சித்த-60	
10	23	ஞா	ஷ-40-35	பூச-19-56	சித்த-60	
11	24	தி	சப்-35-52	ஆயி-17-4	சி-17 ம	சீமந்தம், வியாபாரம்
12	25	செ	அ-32-19	மக-14-59	சித்-60	....
13	26	பு	நவ-29-36	பூர-14-50	அ-60	பிரயாணம்
14	27	வி	தச-28-4	உத்-13-38	ம-13 சி	கெர்ப்பாதானம், சீமந்தம்
15	28	வெ	ஏ-27-42	அஸ்-14-56	அ-14 சி	கெர்ப்பாதானம்
16	29	சனி	து-28-38	சித்-17-20	ம-17 அ	சீமந்தம், வியாபாரம்
17	30	ஞா	திர-30-49	சுவா-20-58	சித்த-20உ	க்ஷீதாரம்பம்
18	31	தி	ச-34-8	விசா-24-43	சித்-24 சி	விவாகம், சீமந்தம்
19	1	செ	○-38-18	அனு-31-19	சித்-31 உ	புஷ்பிணிசாந்தி
20	2	பு	பிர-43-2	கேட்-38-36	சி-37 ம	பிரயாணம்
21	1920௵ மே௴ 3	வி	து-48-5	மூ-44-13	சி-60	ஆலயமாரம்பம்
22	4	வெ	தி-53-10	பூரா-50-40	பி-58 சி	சீமந்தம்
23	5	ச	ச-53-35	உத்-56-33	சி-60	பிரயாணம், குடிப்போக
24	6	ஞா	ப-60-0	திரு-60-0	அ-60	விவசாயம், வியாபாரம்
25	7	தி	ப-0-38	திரு-1-18	அ-1 சி	யந்திரவேலை, விவசாயம்
26	8	செ	ஷ-2-54	அவி-5-7	சி-5 ம	விவாஹம், சீமந்தம்
27	9	பு	ச3-43	சத-7-41	சி-7-அ	பிரயாணம், நாற்றிட
28	10	வி	அ-3-28	பூர-9-6	சி-60	விவசாயம், தடாகம்
29	11	வெ	தச-57-5	உத்-9-16	சித்-9 அ	கெர்ப்பாதானம்
30	12	ச	ஏ-55-37	ரேவ-8-18	ம-8 சி	விவாஹம், சீமந்தம்
31	13	ஞா	து-50-57	அசு-6-18	சி-6-பி	விவாகம்

	கே புசு	சூரி	
	6-வி-புத. 12-வி-சு.		குரு
	16-கி-சு-அ 22-மி-புத.		சனி
		ராகு	செ

Printed and Published by N. Munisawmi Mudaliar at the “Ananda Bodhini” Press, 15, Venkatesa Maistry Street, Madras.